வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 17.05.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 131 பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# 1980களின் பிற்பகுதியில் கொல்லப்பட்ட காணாமற்போன 10 ஆயிரம் தமிழர்கள்!

## புதிய டிஜிற்றல் தரவுத்தளமொன்று வெளியிட்ட 'சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம்'

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

கொழும்பு, மே. 17

இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படை நிலைகொண்டிருந்த 1980களின் இறுதிப்பகுதியில், கொல்லப்பட்ட அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 10,000க்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய புதிய டிஜிற்றல் தரவுத் தளமொன்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

'சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணக் காப்பகத்தை (https://lkdd.itjpsl.com) பொதுமக்களின் பயன்பாட்டுக்காக வெளியிட்டுள்ளது.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் 15

# இலங்கையிலிருந்து இயக்கப்படும் போலிப் "பிரித்தானிய" கணக்குகள்!

## ஏ.ஐ. மூலம் இனவாத பரப்புரை செய்யும் சர்வதேச வலைப்பின்னல் அம்பலம்!!

லண்டன், மே. 17

பிரித்தானியாவில் குடியேற்றவாசிகளுக்கு எதிரான கருத்துக்களைத் தீவிரமாகப் பரப்புவதற்காக, உள்நாட்டுப் பக்கங்கள் போலக் காண்பிக்கும் டசின் கணக்கான பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் கணக்குகள் இலங்கை, வியட்நாம் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து இயக்கப்பட்டு வருகின்றமை பி.பி.சி. புலனாய்வில் அம்பலமாகியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட போலித் தகவல்கள் மற்றும் காணொளிகளைக் கொண்டு, பிரித்தானிய மக்களைத் திசை திருப்பும் ஒரு பாரிய "செல்வாக்குச் செலுத்தும் நடவடிக்கை" இதன் பின்னணியில் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

யோர்க்ஷயர் பகுதியிலிருந்து இயங்குவதாகக் கூறிக்கொள்ளும் இந்தப் பேஸ்புக் பக்கத்தில், வயதான பிரித்தானியர் ஒருவர் தனது ஓய்வூதியம் குறித்து அழுவது போன்ற காணொளி 1.3 மில்லியன் பார்வையாளர்களைப் 15

# வங்கிகள், நிதி நிறுவனங்களுக்கு எதிராக இனி வீட்டில் இருந்தே முறையிட ஏற்பாடு!

கொழும்பு, மே. 17

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு எதிரான முறைப்பாடுகளை, வாடிக்கையாளர்கள் இலகுவாக சமர்ப்பிக்கும் வகையில், இலங்கை மத்திய வங்கி புதிய இணையவழி முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமை ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

மத்திய வங்கியின் ஒழுங்குமுறை கட்டமைப்புக்குள் முறைப்பாடுகளை கையாளுவதில் பொறுப்புக்கூறல், செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை அதிகரிக்கும் நோக்கில் இந்த டிஜிற்றல் தளம் உருவாக்கப்பட்டுள்ளது. 15

# தமிழர் அபிலாஷைகளை மையப்படுத்தி "தமிழ் அரசியல் கட்டமைப்பு முன்முயற்சி"!

## பிரித்தானிய பாராளுமன்றத்தில் தொடக்கம்

லண்டன், மே. 17

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை மையப்படுத்தி 1976 மே 14 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த "வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்" 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, பிரித்தானிய பாராளுமன்றத்தில் புதியதொரு சர்வதேச அரசியல் செயல்முறை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்திடமும், இலங்கை அரசாங்கத்திடமும் சமர்ப்பிப்பதற்கான தமிழ் மக்களின் ஒருங்கிணைந்த உத்தியோகபூர்வ அரசியல் வரைவு ஆவணமொன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, 15

# மார்ச்சில் தனியார் கடன் வழங்கல் இலங்கையில் சடுதியாக அதிகரிப்பு

## வட்டி விகிதங்கள் மேலும் அதிகரிக்கும் அச்சம்

கொழும்பு, மே. 17

ஈரானியப் போர் காரணமாக உள்நாட்டுப் பொருளாதாரத்தில் புதிய நெருக்கடிகள் உருவாகி வரும் சூழலிலும், கடந்த மார்ச் மாதத்தில் இலங்கையின் வர்த்தக நிறுவனங்களும் நுகர்வோரும் வங்கிகளிடமிருந்து மிக அதிவேகமாகப் பணத்தைக் கடனாகப் பெற்றுள்ளதாக மத்திய வங்கியின் புதிய தரவுகள் தெரிவிக்கின்றன.

வட்டி விகிதங்கள் மேலும் உயர்வதற்கு முன்னர் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த அவசரம் ஏற்பட்டிருக்கலாம் 15

# தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடாவிடில் மாகாண சபைகளும் பறிபோகும்!

## எச்சரிக்கிறார் செல்வம் அடைக்கலநாதன்



வவுனியா, மே. 17

தமிழ்க் கட்சிகளுக்குள் ஒற்றுமை இல்லை என்றால், தேசிய மக்கள் சக்தியே மாகாண சபைகளைக் கைப்பற்றும் சூழல் உருவாகும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித் துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் 15

# வாகன இறக்குமதி வரி அதிகரிப்பு தற்காலிகமானது

கொழும்பு, மே 17

வாகன இறக்குமதிக்கான தீர்வைக் கட்டணம் தற்காலிகமாக மூன்று மாத காலத்துக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் சாதாரண மக்கள் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள்கள், 14

# மின்சார சபை கலைக்கப்பட்டும் நுகர்வோருக்கு விடிவு வரவில்லை

## மின் நுகர்வோர் சங்கம் கடும் விமர்சனம்

கொழும்பு, மே. 17

இலங்கை மின்சார சபை கலைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக ஆறு புதிய நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், அதன் மூலம் வினைத்திறன் அதிகரிக்கவோ அல்லது நுகர்வோருக்கு எவ்வித நிவாரணமோ கிடைக்கவில்லை என மின்சார நுகர்வோர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள மின்சார நுகர்வோர் சங்கத்தின் பொதுச் செயலாளர் 14

# இலங்கை நீதிமன்றங்களில் தேங்கியுள்ள 11 இலட்சத்துக்கும் அதிகமான வழக்குகள்!

கொழும்பு, மே. 17

இலங்கையிலுள்ள நீதிமன்றங்களில் ஒட்டுமொத்தமாக 11 இலட்சத்திற்கும் அதிகமான வழக்குகள் தீர்க்கப்படாமல் தேங்கிக்கிடப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீதி அமைச்சினால் வெளியிடப்பட்ட அண்மைக்கால அறிக்கை ஒன்றில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, கடந்த 2025 ஜூன் 30ஆம் திகதி வரையான தரவுகளின் அடிப்படையில், 14

# மீனவர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, மே. 17

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளுக்கு செம்மஞ்சள் நிறத்திலான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் நேற்று மாலை வெளியிட்டுள்ள 14

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதிப் போராட்டத்துக்கு இடையூறு! மன்றில் மன்னிப்பு கோரிய பொலிஸார்

கொழும்பு, மே 17

கடந்த 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி நிலவிய காலகட்டத்தில், காலி கோட்டைக்கு அருகில் சட்டத்தரணிகள் குழுவினர் நடத்திய அமைதியான போராட்டத்திற்குள் பொலிஸார் புகுந்து இடையூறு விளைவித்த சம்பவம் தொடர்பில் அன்றைய காலகட்டத்தில் காலி பிராந்தியத்திற்குப் பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட மூவர், சம்பந்தப்பட்ட சட்டத்தரணிகளிடம் உயர் நீதிமன்றத்தில் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரினர்.

பொலிஸாரின் இந்தச் செயல் மூலம் தங்களது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாகக் குற்றம் சாட்டி, காலி பிராந்தியத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகளான அஜித் குமார மற்றும் அமரதிவாகர லியனகே ஆகிய இருவரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு, உயர் நீதிமன்ற நீதியரசர்களான ப்ரீதி பத்மன் சூரசேன, அசல வெங்கப்புலி மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகிய மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த அன்றைய காலி பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜே. வேதசிங்க, காலி பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் காலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

அங்கு பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதிவாதிகள் மனுதாரர்களிடம் நிபந்தனையற்ற மன்னிப்பைக் கோருவதாக தெரிவித்தார். (எ)

## கலாசார ரீதியாக வளர்ச்சி பெற்ற பிரஜைகளை உருவாக்கவேண்டும்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய வலியுறுத்தல்



கொழும்பு, மே 17

மாற்றத்தை ஏற்படுத்தும் மாற்றத்துக்காக மனப்பாங்கு ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் வளர்ச்சி பெற்ற பிரஜைகளை உருவாக்க வேண்டும். நாம் எதிர்பார்க்கும் மனப்பாங்கு ரீதியாக வளர்ச்சியடைந்த, நாகரிகமான பிரஜை உருவாவதற்குத் தேவையான அடித்தளம் பாடசாலைக் காலத்தில் பெறும் அனுபவங்களாகும் என்றும் அந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு இடமளிப்பதற்கே அரசாங்கம் 13 வருட பாடசாலைக் கல்வியை உறுதிப்படுத்தியிருக்கிறது என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை சவ்சிரிபாய வளாகத்தில் நடைபெற்ற டவர் ஹோல் திரையரங்கு அறக்கட்டளையினால் 30ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட "2024-2025 அகில இலங்கை பாடசாலைகள் நாடகப் போட்டித் தொடரின்" விருது வழங்கும் விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

பாடசாலை மாணவர்கள் இத்தகைய போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றாலும் பெறாவிட்டாலும், கலை மற்றும் கலாசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் அவர்களது வாழ்க்கைக்கு மட்டுமன்றி, நாட்டுக்குத் தேவையான உயரிய மனப்பாங்கைக் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதிலும் பெரிதும் துணையாக அமைகின்றன. எனினும், தற்காலத்தில் பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியைத் துரிதமாக முடித்து விட்டு, அவர்களை அவசர அவசரமாக வளர்ந்தவர்களாக்குவதற்கு முற்படும் போக்கினைப் பெரியவர்கள் மத்தியில் காணக்கூடியதாக இருக்கின்றது. இது நாட்டுக்குத் தேவையான வளர்ச்சி பெற்ற பிரஜைகளை உருவாக்குவதற்குப் பொருத்தமானதொரு சூழல் அல்ல.

நாம் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்தும் மாற்றத்தின் மூலம் மனப்பாங்கு ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் வளர்ச்சி அடைந்த மனிதனை உருவாக்குவதற்குக் கலைத்துறையினால் மகத்தான பணியை ஆற்ற முடியும். சமூகத்திற்குத் தேவையான சிறந்த கற்பனைத்திறன், கருணை மற்றும் தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட படைப்பாற்றல் மிக்க, முழுமையான நற்பிரஜைகளை உருவாக்கும் நோக்கில் கல்விச் செயன்முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (எ)

## சீரற்ற காலநிலையால் 10 மாவட்டங்கள் பாதிப்பு

கொழும்பு, மே 17

இலங்கைக்கு வடக்கே நிலவும் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தின் தாக்கம் காரணமாக, நாடு முழுவதும் சீரற்ற காலநிலை தொடர்கிறது. கடந்த 24 மணிநேரத்தில் பதிவான கடும் மழையினால் 10 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இருவர் உயிரிழந்தனர். கொழும்பு, களுத்துறை உள்ளிட்ட பல பகுதிகளில் 200 மில்லி மீற்றர் வரையான கன மழை பதிவாகிய நிலையில், அடுத்த சில நாட்களுக்கும் இந்த அபாய நிலை நீடிக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, காலி, அம்பாந்தோட்டை, மொனராகலை, மட்டக்களப்பு, களுத்துறை, கொழும்பு, புத்தளம், அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 1151 குடும்பங்களைச் சேர்ந்த 3623 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடை ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவிக்கையில்,

நாட்டின் பல பகுதிகளில் சுமார் 200 மில்லி மீற்றர் வரை மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் பல இடங்களில் 175 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பதிவாகியுள்ளது. களுத்துறை, கொழும்பு, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலேயே கடந்த 24 மணிநேரத்தில் 60 மில்லி மீற்றர் முதல் 175 மில்லி மீற்றர் வரையான பலத்த மழை பெய்துள்ளது.

இந்த மழையுடனான காலநிலை காரணமாக சில மாவட்டங்களில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், "பாதிக்கப்பட்ட மக்கள்" மற்றும் "பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள்" என்பவை இரு வேறு விடயங்கள். தற்போது களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் மட்டுமே மக்கள் பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பாரியளவிலான அனர்த்த நிலைமை இன்னும் ஏற்படவில்லை. எனினும், இந்த மழை வீழ்ச்சி மேலும் அதிகரித்தால் பாதிப்புகள் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கிறோம்.

பொதுமக்கள் தங்களுக்கு ஏதேனும் சிக்கல்கள் அல்லது தகவல்கள் தேவைப்படின் எமது 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தை 24 மணிநேரமும் தொடர்பு கொள்ளலாம். மும்மொழிகளிலும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடியும். உங்களது கிராமங்களில் உள்ள உத்தியோகத்தர்களுடன் தொடர்பில் இருப்பது மிகவும் முக்கியமானது. - என்றார். (எ)

## தடையின்றி மின்சாரம் வழங்கப்படும்

கொழும்பு, மே 17

வெசாக் வாரத்தில் தடையின்றி மின்சாரம் வழங்கப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அரச சேவையைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் 6ஆவது கூட்டம் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


மக்கள் மீது மேலதிக சுமை விழாதவாறு, வலுசக்தி தொடர்பான செலவுகளை அரசாங்கமே பொறுப்பேற்று ஒரு நிலையான முகாமைத்துவச் செயன்முறையை முன்னெடுத்துள்ளது.

எதிர்வரும் வெசாக் வாரத்தில் மக்களுக்கு தடையின்றி மின்சாரத்தை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், அரசாங்கத்தின் முறையான திட்டமிடல் காரணமாகவே பாரிய மின்சார நெருக்கடியை தவிர்க்க முடிந்ததாகவும் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார். (எ)

## ஒழுக்கநெறி இல்லாத தொழில்நுட்பம் சமூகப் பிரிவினையை ஏற்படுத்தும்

### ஹொங்கொங்கில் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



ஹொங்கொங், மே 17

அபிவிருத்தியானது பாரம்பரிய நாகரிகத்துடன் இணைந்து செயற்படும்போது மட்டுமே மனித குலம் உன்னதமான வெற்றிகளைப் பெற முடியும் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்தோடு, செயற்கை நுண்ணறிவு, தொலைதூர மருத்துவம் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் அவசியமானவை. ஆனால், ஒழுக்கநெறி இல்லாத தொழில்நுட்பம் சமூகப் பிரிவினையையே ஏற்படுத்தும்.

ஹொங்கொங்கில் நடைபெற்ற "2026 ஆசிய கலாசார பொது நலன்புரி மன்றத்தில்" கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

2030ஆம் ஆண்டாகும்போது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் ஆசிய கண்டம் சுமார் 60 சதவீத பங்களிப்பு செய்யும்.

இந்த நிலையில், இந்த எழுச்சியின்போது நமது கலாசார அடையாளங்களையும் நவீன தொழில்நுட்பத்தையும் எவ்வாறு சமநிலைப்படுத்தப் போகிறோம் என்ற கேள்வி எழுகிறது.

25 நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட இலங்கையின் குளம், கிராமம், தாதுகோபம் மற்றும் விகாரை ஆகிய நான்கும் ஒன்றோடொன்று இணைந்த உன்னத வாழ்வியல் கட்டமைப்பாகும். எமது முன்னோர்கள் இவற்றைத் தங்களின் புகழுக்காகக் கட்டவில்லை. நிலைத்தன்மை மற்றும் பொதுமக்களின் நலனுக்காகவே உருவாக்கினர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துறைமுகங்கள், அதிவேக நெடுஞ்சாலைகளை உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்தை நவீனமயமாக்கிய அதே வேளை, கிராமப்புற வலுவூட்டல் மற்றும் சமூக நலன்புரித் திட்டங்கள் மூலம் நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்தார்.

செயற்கை நுண்ணறிவு, தொலைதூர மருத்துவம் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் அவசியமானவை. ஆனால், ஒழுக்கநெறி இல்லாத தொழில்நுட்பம் சமூகப் பிரிவினையையே ஏற்படுத்தும்.

ஆசியாவின் இளம் தலைமைத்துவம் வெறும் தேர்தல்களைப் பற்றி மட்டும் சிந்திக்காமல், வரவிருக்கும் தலைமுறைகளைப் பற்றியும் சிந்திக்கவேண்டும். ஆசியா பொருளாதாரத் தலைமைத்துவத்தை விட நெறிமுறை மற்றும் கலாசாரத் தலைமைத்துவத்துக்குத் தயாராக வேண்டும்.

ஒரு நாகரிகத்தின் வலிமை அதன் இராணுவ பலத்தால் அளவிடப்படுவதில்லை. மாறாக அதன் மக்களின் வாழ்க்கைத் தரத்தினாலுமே அளவிடப்படுகிறது - என்றார். (எ)

## விபத்து நடந்த ரயில் தண்டவாளத்தில் ஆணிகளை கழற்றியவர் சிக்கினார்!

கொழும்பு, மே 17

நேற்று அதிகாலை ரயில் விபத்து இடம்பெற்ற இடத்தில், ரயில் தண்டவாளத்தில் ஆணிகளைக் கழற்றியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொட பொலிஸாரினால் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடுமையான போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையானவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தண்டவாளத்தில் கழற்றப்பட்ட ஆணிகளை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு சென்ற நபர் இவரே என்பது பொலிஸார் நடத்திய ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபரை கைது செய்வதற்காக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆளும் தரப்புக்கு ஆதரவாக காட்டுச்சட்டம் அமுலில்!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, மே 17

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸநாயக்கவுக்கு எதிராக அளிக்கப்பட்டுள்ள முறைப்பாடு குறித்து இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆளும் தரப்பின் உறுப்பினர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் நெகிழ்வுத்தன்மையை கடைப்பிடிக்கிறார்கள். காட்டுச்சட்டமே தற்போது அமுலில் உள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிறிலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரியான கபில சந்திரசேன தற்கொலை செய்து கொண்டாரா அல்லது தற்கொலை செய்து கொள்வதற்கு ஒரு தரப்பினரால் தூண்டப்பட்டாரா என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகிறது. கபில சந்திரசேனவுக்கு வழங்கப்பட்ட பிணை குறித்து எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸநாயக்க தொடர்பில் கபில சந்திரசேன உயிரிழப்பதற்கு முன்னர் நீதிமன்றத்துக்கு சத்தியக்கடதாசி ஊடாக பல விடயங்களை வெளிப்படுத்தியுள்ளார். தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷவின் பெயரை குறிப்பெடுத்ததாக கபில சந்திரசேன நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

சாட்சியாளர்கள் படுகொலை செய்யப்படுவது, மர்மமான முறையில் உயிரிழப்பது தற்போது வழக்கமாகி விட்டது. இது காட்டுத்தன்மையான சட்டத்தின் நிர்வாகமாகும்.இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது- என்றார். (எ)

# ரயில் விபத்தில் சிக்கி 12 பயணிகள் காயம்

கொழும்பு, மே 17

நேற்று அதிகாலை வனவாசல மற்றும் ஹுனுபிட்டிய இடையே ரயில் ஒன்று தடம் புரண்டு, பயணிகள் பெட்டி கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 12 பயணிகள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் விபத்து நடந்த இடத்துக்கு அருகிலுள்ள தனியார் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும், அவர்களில் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யு. வுட்லர் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 3:25 மணிக்கு பொல்கஹவெலையிலிருந்து புறப்பட்ட இந்த ரயில், தெற்கு களுத்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது விபத்தில் சிக்கியது. (எ)



# மழை குறைவடைந்ததால் ஆறுகளின் நீர்மட்டம் வீழ்ச்சி

கொழும்பு, மே 17

மழை வீழ்ச்சியில் ஓரளவு குறைவு ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து, அதிகரித்திருந்த ஆறுகளின் நீர்மட்டம் படிப்படியாகக் குறைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களுடன் ஒப்பிடுகையில், மழை வீழ்ச்சியில் ஏற்பட்டுள்ள சில குறைவுகளுடன் இந்த நிலைமை காணப்படுவதாக அத்திணைக்களத்தின் நீர்ப்பாசன பணிப்பாளர் எஸ்.எஸ். சூரியபண்டார தெரிவித்தார்.

இருப்பினும், களு கங்கையின் மில்லகந்த நிலையத்தின் தரவுகளுக்கு அமைவாக, இது வரையில் சிறு வெள்ள நிலைமை நிலவி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அத்தனகலு ஓயாவின் நீர்மட்டமும் படிப்படியாகக் குறைந்து வருவதைச் சுட்டிக்காட்டிய அவர், அத்தனகலு ஓயா பகுதியில் இதுவரையிலும் சிறு வெள்ள நிலைமை காணப்படுவதால், அத்தனகலு ஓயாவின் கீழ்நிலைப் பகுதிகளான கம்பஹா, கட்டான, வத்தளை போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்கள் இது குறித்து அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

களனி கங்கையை ஒட்டிய ஹங்வெல்ல பகுதியில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதாகவும், இதற்கமைய தொடர்ந்து மழை பெய்யக்கூடிய வானிலை நிலவரம் காணப்படுவதால் ஆறுகளின் நீர்மட்டம் குறித்து அவதானத்துடன் இருக்குமாறும் அவர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலை நிலவரப்படி 73 பிரதான நீர்த்தேக்கங்களில் சுமார் 22 நீர்த்தேக்கங்களும், 19 நடுத்தர அளவிலான குளங்களும் வான்பாய்ந்து வருவதாக சுட்டிக்காட்டிய அவர், எதிர்வரும் மழை வீழ்ச்சி நிலவரங்களை கருத்திற்கொண்டு வான் கதவுகள் திறக்கப்படுவது குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவித்தார். (எ)

# சீரற்ற வானிலையால் 141 வீடுகள் சேதம்!

கொழும்பு, மே 17

நாட்டில் நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக 141 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி முதல் நேற்றுக்காலை வரையான காலப்பகுதிக்குள் 141 வீடுகள் சேதமடைந்தன.

அத்துடன், இந்த அனர்த்த நிலைமை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் ஒரு வீடு முழுமையாக சேதமடைந்தது என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

பகுதியளவில் சேதமடைந்த வீடுகளில் அதிகளவான வீடுகள் களுத்துறை மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளதுடன், அந்த வீடுகளின் எண்ணிக்கை 78 ஆகும்.

இதற்கு மேலதிகமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 25 வீடுகளும், இரத்தினபுரி மாவட்டத்தில் 12 வீடுகளும், காலி மாவட்டத்தில் 6 வீடுகளும், கொழும்பு மாவட்டத்தில் 5 வீடுகளும், மொனராகலை மாவட்டத்தில் 4 வீடுகளும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 வீடுகளும், கம்பஹா மாவட்டத்தில் 3 வீடுகளும், அம்பாந்தோட்டை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் தலா 2 வீடுகளும் இவ்வாறு பகுதியளவில் சேதமடைந்தன.

இதேவேளை, நிலவி வரும் அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 4,099 ஆகும் எனவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 48 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட 1,263 குடும்பங்களைச் சேர்ந்த 4,099 நபர்கள் இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ)

# இலங்கைக்கு வடகிழக்கே குறைந்த அமுத்தப் பிரதேசம் மேலும் நீடிப்பு

கொழும்பு, மே 17

நேற்றுக்காலை வெளியான புதிய தரவு பகுப்பாய்வுகளின் படி, இலங்கைக்கு வடகிழக்கே அமைந்துள்ள குறைந்த அமுத்தப் பிரதேசம் மேலும் நீடிப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த அமைப்பின் நடத்தை, வளர்ச்சி மற்றும் நகரும் பாதை குறித்து திணைக்களம் தொடர்ந்து அவதானித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பின் தாக்கம் காரணமாக மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடமாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுவதுடன், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

சில இடங்களில் 75 மில்லிமீற்றர் அளவிலான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

அநுராதபுரம் மாவட்டத்தில் பல தடவைகள் மழை பெய்யக்கூடும்.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

# லக்ஷ்மன் யாப்பாவின் மேன்முறையீட்டு மனு செப்ரெம்பர் 7 ஆம் திகதி விசாரணைக்கு

கொழும்பு, மே 17

ஊழல் குற்றச்சாட்டுக்களின் கீழ் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறு கோரி, முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன சமர்ப்பித்த மேன்முறையீட்டு மனு தொடர்பான விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

இந்த மனு பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது மன்றில் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதியரசர்கள் அமர்வுஇ குறித்த மனு மீதான விசாரணையை செப்ரெம்பர் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தனக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஊழல் குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாது எனத் தனது சட்டத்தரணிகள் ஆரம்பக்கட்ட ஆட்சேபனைகளை முன்வைத்த போதிலும், மேல் நீதிமன்றம் அந்த ஆட்சேபனைகளை நிராகரித்ததாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# ஹிருணிகா பிரேமசந்திர உள்ளிட்ட இருவருக்கு பிடியாணை உத்தரவு!

கொழும்பு, மே 17

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட இருவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கோட்டை நீதிவான் பசன் அமரசேன பிடியாணை பிறப்பித்துள்ளார்.

வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதன் காரணமாகவே இந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜனாதிபதி மாளிகையின் நுழைவாயிலுக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பில் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுங்க இறக்குமதி வரியின் மீது 50 வீதம் மேலதிக வரி விதிப்பு!

கொழும்பு, மே 17

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்குரிய சுங்க இறக்குமதி வரியின் மீது 50 சதவீதம் மேலதிக வரி விதிப்பதற்கு நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனம் ஒன்றுக்காக இதுவரை விதிக்கப்பட்ட 30 சதவீதம் சுங்க இறக்குமதி வரியின் மீது மேலும் 50 சதவீதம் மேலதிக வரி விதிக்கப்படும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலின்படி, நேற்று முதல் மூன்று மாத காலப்பகுதிக்கு இந்த 50 சதவீத மேலதிக வரி வசூலிக்கப்படவுள்ளது.

இருப்பினும், மே 15 அல்லது அதற்கு முன்னர் கடன் கடிதங்கள் திறக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு இந்த புதிய 50 சதவீதம் சுங்க வரி பொருந்தாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# பஸ்னாகொட நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் திறப்பு

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 17

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கம்பஹா மாவட்டத்தில் மக்களின் குடிநீருக்காக பயன்படும் முக்கிய ஆதாரமான பஸ்னாகொட நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

இதன் காரணமாக வெள்ளிக்கிழமை அதன் மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

பஸ்னாகொட நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால், அத்தனகல ஓயா ஆற்றின் இரு மருங்கிலும் வசிக்கும் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# மக்கள் வரிக்கு அல்ல அநீதிக்கே எதிர்ப்பு!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, மே 17

மக்கள் தற்போது கொண்டுள்ள கோபம் வரி செலுத்துவது தொடர்பானது அல்ல மாறாக தங்களுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்தே அவர்கள் சீற்றமடைந்துள்ளனர். அரசாங்கம் கொண்டுவரவுள்ள புதிய சட்ட திருத்தங்கள் சாதாரண மக்களை கடுமையாக பாதிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மக்கள் தற்போது கொண்டுள்ள கோபம் வரி செலுத்துவது தொடர்பானது அல்ல மாறாக தங்களுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்தே அவர்கள் சீற்றமடைந்துள்ளனர். பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய 185ஏ பிரிவானது, வரி அறிக்கைகளை தாக்கல் செய்வதில் ஏற்படும் தாமதம் அல்லது பதிவு செய்வதில் ஏற்படும் சிறிய நிர்வாகத் தவறுகளைக் கூடக் குற்றச் செயல்களாகச் சித்திரிக்கிறது. இதன் விளைவாக, தமது வாழ்வாதாரத்திற்காக அன்றாடம் போராடும் ஒரு சிறு தொழில்முயற்சியாளரும், திட்டமிட்டு பல மில்லியன் கணக்கான வரி ஏய்ப்புச் செய்யும் ஒரு பெரும் மோசடியாளரும் சட்டத்தின் முன் சமமாகவே கருதப்படும் பாரிய அவலம் நேரிடும். இது முற்றிலும் குறைபாடுள்ள ஒரு அணுகுமுறையாகும்.

அரசாங்கம் வரி முறையைச் சீரமைப்பதற்கோ, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை நவீனமயமாக்குவதற்கோ அல்லது வரி செலுத்தும் நடைமுறைகளை எளிதாக்குவதற்கோ முனையாமல், சாதாரண மக்களைக் குற்றவாளிகளாக்கும் குறுக்கு வழியையே கையில் எடுத்துள்ளது. இவ்வளவு விரைவாக இவ்வாறான சட்டங்களை நிறைவேற்ற அரசாங்கத்திடம் பலம் இருக்குமானால் உண்மையான ஊழல் எதிர்ப்புச் சட்டங்களுக்கு என்ன நடந்தது என்ற கேள்வி எழுகிறது. நிதி மோசடி, பணச்சலவை மற்றும் பொதுச் சொத்துக்களைச் சூறையாடியவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எங்கே?

அரசாங்கம் ஊழல்வாதிகளைத் தேடிச் சென்று, உண்மையான மோசடி செய்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமே தவிர, சாதாரண மக்களுக்கு எதிராகச் சட்டத்தை ஒரு அடக்குமுறை ஆயுதமாகப் பயன்படுத்தக் கூடாது. சட்டங்கள் மூலமாக நீதி, விகிதாசாரத் தன்மை மற்றும் மக்களின் அடிப்படை அரசியலமைப்பு உரிமைகள் மீறப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் ஒருபோதும் மௌனமாக இருக்கப்போவதில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# சிறு, நடுத்தர தொழில்களுக்கு நிலைத்தன்மை மிக அவசியம்

## பிரதமர் ஹரிணி வலியுறுத்தல்

கொழும்பு, மே 17

'தேசிய சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் மூலோபாயக் கட்டமைப்பு 2026 ஆனது இத்துறைக்குத் தேவையான கொள்கை ரீதியான தொடர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையைக் கொண்டு வருவதால் அது மிகவும் முக்கியமானது. ஒரு அரசாங்கம் என்ற வகையில், நிலைத்தன்மையைக் கொண்டுவருவது, ஒத்துழைப்பை வளர்க்கும் ஒரு சூழலை உருவாக்குவது மற்றும் இடர்களை எதிர்கொண்டு புத்தாக்கங்களை மேற்கொள்ளும் நம்பிக்கையை மக்களிடையே கட்டியெழுப்புவது எமது பொறுப்பாகும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

தொழில் மற்றும் தொழில் முயற்சி மேம்பாட்டு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தேசிய மூலோபாயக் கட்டமைப்பு 2026' தொடர்பான கலந்துரையாடலின் இரண்டாம் நாள் நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் மேலும் கூறுகையில்,

உலகளாவிய ரீதியில் உறுதியற்ற மற்றும் சீர்குலைந்த ஒரு சூழல் நிலவும் வேளையில், இலங்கை தனது மாற்றத்திற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இத்தகைய சூழலில் சிறு மற்றும் நடுத்தர கைத் தொழில் துறையில் நிலைத்தன்மை மற்றும் பின்னடைவை எதிர் கொள்ளும் ஆற்றலை வளர்ப்பது அவசியம்.

'இந்தக் கட்டமைப்பு கொள்கை ரீதியான தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதுடன், இத்துறையை ஸ்திரப்படுத்துகிறது. குறுகிய கால நோக்கங்களுக்காக அல்லாமல், நீண்ட கால தொலைநோக்குடன் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை உருவாக்குவதே இதன் நோக்கம். துண்டு துண்டாகச் சிதறிக்கிடக்கும் இந்தத் துறையை ஒருங்கிணைந்த மற்றும் வலுவான ஒரு தளத்திற்குள் கொண்டு வருவதற்கு இந்த முயற்சி மிகவும் முக்கியமானது.

அரசாங்கம் ஒருபோதும் இடையூறு விளைவிக்கும் காரணியாக மாறக்கூடாது. கொள்கைகள் அடிக்கடி மாறாது என்ற நம்பிக்கையை மக்களுக்கு வழங்க வேண்டும். அந்த நம்பிக்கையின் மூலமே எம்மால் புத்தாக்கங்களை ஊக்குவிக்க முடியும்.'

கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் தொழில்முயற்சி கல்விச் சீர்திருத்தங்களில் தொழில்முயற்சியை இணைக்க வேண்டியது அவசியமாகும். 6 ஆம் தரம் முதல் தொழில்முயற்சி மற்றும் நிதி அறிவு ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதன் முக்கியமாகும். மாணவர்களுக்கு நடைமுறை அனுபவங்களை வழங்குவதற்கு கைத்தொழில் துறையின் ஒத்துழைப்பு அவசியம்- என்றார். (எ)

# முறையற்ற முகாமைத்துவத்தால் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி

கொழும்பு, மே 17

இலங்கையின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருப்பதுடன், அரசாங்கத்தின் முறையற்ற நிதி முகாமைத்துவத்தால் நாட்டு மக்கள் மிக வேகமாக வறுமை நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர் என்று சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒன்றரை வருடங்களாக நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையவில்லை. தேசிய ரீதியில் செல்வத்தை உருவாக்குவதற்கான எவ்விதத் திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. குறிப்பாக அரசாங்கம் மூலதனச் செலவுகளை குறைத்துள்ளதால் சந்தையில் பணப்புழக்கம் இல்லாது போயுள்ளதாகவும் இது பொருளாதாரத்தை மேலும் சுருக்கியுள்ளது.

அரசாங்கத்தின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொள்கைகள் எவ்வித தர்க்கமும் அற்றதாக காணப்படுகிறது. இளைஞர்களுக்கு குறைந்த விலையில் வாகனங்களை வழங்குவதாக கூறிவிட்டு, அதிக விலையுடைய வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதித்ததன் மூலம் நாட்டின் டொலர் கையிருப்பு பெருமளவில் வீணடிக்கப்பட்டுள்ளது. அதனால் டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் சரிவடைந்து வருகிறது. இது ஒட்டுமொத்த உற்பத்தி மற்றும் நுகர்வுத் துறையை பாதித்துள்ளது- என்றார். (எ)

அரசியல் அழுத்தத்திலிருந்து

# சட்டவாட்சியை பாதுகாக்க சர்வதேசத்திடம் முறைப்பாடு

கொழும்பு, மே 17

ஜனாதிபதி முதல் அரசாங்கத்தின் சகல உறுப்பினர்களும் நீதிமன்றத்துக்கு நேரடியாக அழுத்தம் பிரயோகிக்கிறார்கள். அரசியல் அழுத்தத்தில் இருந்து சட்டவாட்சியை பாதுகாப்பதற்கு சர்வதேச அமைப்புகள் மற்றும் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளிடம் முறைப்பாடு செய்வோம் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மத்திய கிழக்கில் மோதல் நிலைமை தீவிரமடைந்துள்ளதால் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. ஆகவே, எதிர்வரும் காலப்பகுதியில் எரிபொருள் விலையில் திருத்தம் ஏற்படக் கூடும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

ஹோர்மூஸ் நீரிணை ஊடாக இலங்கை எரிபொருளை இறக்குமதி செய்யவில்லை. புதிய தரப்படுத்தலுக்கமைய அரசாங்கமானது சிங்கப்பூர் மற்றும் இந்தியாவில் இருந்தே எரிபொருளை இறக்குமதி செய்கிறது. அரசாங்கம் இதனை பலதடவைகள் உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வாறான பின்னணியில் ஒவ்வொரு மாதமும் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படுவது சந்தேகத்துக்குரியது.- என்றார். (எ)

# இராணுவ சிப்பாய் சடலமாக மீட்பு

கொழும்பு, மே 17

ஹோமாகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிடிபன தெற்கு பகுதியில் உள்ள வயல்வெளி ஒன்றுக்கு அருகில் கிணற்றிலிருந்து நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை ஹோமாகம பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே இந்த சடலம் மீட்கப்பட்டது.

உயிரிழந்தவர் மொரன்துடுவ - மஹாலந்த பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய இராணுவ சிப்பாய் என தெரியவந்துள்ளது.

நீதிவான் விசாரணை மற்றும் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், ஹோமாகம பொலிஸார் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
17.05.2026 ஞாயிற்றுக்கிழமை
ஈழநாடு

பராபவ வருடம், வைகாசி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# முறைமை மாற்றத்தின் இலட்சணம்

தெற்காசியாவில் இலங்கை, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் நான்கு வருட இடைவெளிக்குள் அரசாங்கங்களை தூக்கியெறிந்த மக்கள் கிளர்ச்சிகளின் முன்னரங்கத்தில் நின்ற இளம் தலைமுறையினர் முறைமை மாற்றத்தை வேண்டிநின்றனர்.

ஆனால், அந்த கிளர்ச்சிகளை தொடர்ந்து ஆட்சியதிகாரத்துக்கு வந்த அரசியல் சக்திகள் முறைமை மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய வல்லமை இல்லாதவையாக இருப்பதைக் காணும் இளந்தலைமுறையினர் மீண்டும் ஏமாற்றம் அடையும் நிலையே காணப்படுகிறது.

அடிப்படையில் முறைமை மாற்றம் என்பது ஆட்சிகளை மாற்றுவதன் மூலம் சாதிக்கக்கூடியதல்ல. அதிகாரவர்க்கத்துக்கு காலங்காலமாக சேவை செய்த பழைய அரசு இயந்திரத்தை முற்று முழுதாக மாற்றியமைக்காமல் முறைமை மாற்றத்தைப் பற்றி பேசுவதில் பயனில்லை.

இலங்கையில் ராஜபக்சாக்களின் ஆட்சிக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின் விளைவாக மாற்றமடைந்த அரசியல் சூழ்நிலையை பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றிய ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முறைமை மாற்றத்தை நோக்கிய திசையில் பயணிக்கிறதா அல்லது ஏற்கெனவே நடைமுறையில் இருந்த முறைமைக்கு தன்னை இசைவாக்கிக் கொள்கிறதா என்று புரியவில்லை.

பங்களாதேஷை பொறுத்தவரை, ஷேய்க் ஹசீனாவின் ஆட்சியை மக்கள் கிளர்ச்சி தூக்கியெறிந்த பிறகு உடனடியாக முஹம்மது யூனுஸ் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் இளம் மாணவ சக்திகள் செல்வாக்குச் செலுத்தக் கூடியதாக இருந்த போதிலும், அடுத்து வந்த தேர்தலில் காலங்காலமாக பங்களாதேஷ் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்த குடும்பங்களில் ஒன்றின் தலைமையிலான பங்களாதேஷ் தேசியவாத கட்சியே வெற்றிபெற்று முன்னாள் பிரதமர் பேகம் காலிதா ஷியாவின் மகனே பிரதமராக வந்தார்.


நேபாளத்தில் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தைக் கவிழ்த்த மக்கள் கிளர்ச்சியின முன்னரங்கத்தில் நின்ற இளம் தலைமுறையினரும் தேர்தலை அடுத்து அமைந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இலலை என்றே செய்திகள் கூறுகின்றன. இலங்கையையும் பங்களாதேஷையும் மோலன்றி நேபாளத்தில் சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கட்சியின் தலைவர் பிரதமராகியிருப்பது மாத்திரமே ஒரு குறிப்பிடத்தக்க வித்தியாசம்.

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு மாநிலத்தின் இளம் தலைமுறையினரே உந்து சக்தியாக இருந்ததாக கூறப்படுகிறது. மாநிலத்தை கடந்த ஆறு தசாப்தங்களாக மாறிமாறி ஆட்சிசெய்த திராவிட இயக்கத்தின் இரு பிரதான கட்சிகளை தோற்கடித்து விஜய் முதலமைச்சராகியதை "அரசியல் நிலநடுக்கம்" என்று அவதானிகளும் ஊடகங்களும் வர்ணித்தன.

ஆனால், சட்டசபையில் தனது கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்காத நிலையில் அரசாங்கத்தை அமைப்பதற்கு மற்றைய கட்சிகளின் ஆதரவைப் பெற விஜய் கடைப்பிடித்த அணுகுமுறைகள் தமிழ்நாட்டின் பழைய அரசியலில் இருந்து வேறுபட்டதாக இருக்கவில்லை. விஜய் ஆட்சிக்கு வந்ததையும் "முறைமை மாற்றம்" என்று வர்ணித்தவர்களும் இருக்கிறார்கள்.

முறைமை மாற்றத்தை இளம் தலைமுறையினர் விரும்புகிறார்கள். பழைய அதிகார வர்க்கங்கள் மீது அவர்கள் கடுமையான வெறுப்பைக் கொண்டிருக்கிறார்கள் என்பது எல்லாம் உண்மை. ஆனால், முறைமை மாற்றம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதைப் விளக்கம் எதுவும் இல்லாமலேயே அவர்கள் முறைமை மாற்றத்துக்காக வீதிகளுக்கு இறங்குகிறார்கள் போன்று தெரிகிறது.

# இரு அரசியல் அடையாளங்களின் ஒப்பீடு



தெற்காசிய அரசியல் தொடர்ந்து பரிணமித்து வரும் நிலையில், இரண்டு முற்றிலும் மாறுபட்ட அரசியல் ஆளுமைகள் -தமிழ் திரையுலகில் இருந்து அரசியலுக்கு வந்துள்ள தளபதி விஜய்யும் இலங்கையின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் -தற்போதைய அரசியல் சூழலுக்கு எதிரான நிலைப்பாடு மற்றும் சீர்திருத்தச் செய்திகளுக்காக பொது விவாதங்களில் அதிகளவில் ஒப்பிடப்படுகிறார்கள்.

வெவ்வேறு அரசியல் அமைப்புகள் மற்றும் வெவ்வேறு முதிர்ச்சி நிலைகளில் இவர்கள் செயல்பட்டாலும், இரு தலைவர்களும் பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்திற்கு சவால் விடுப்பது, இளைஞர்களைக் கவர்வது மற்றும் முறையான மாற்றத்தைக் கொண்டுவருவதாக உறுதி அளிப்பது போன்ற அம்சங்களை மையமாக வைத்தே தங்களது பிம்பத்தைக் கட்டமைத்துள்ளனர்.

இருப்பினும், இவர்களுக்கு இடையிலான ஒற்றுமைகள் பெரும்பாலும் கருத்தியல் சார்ந்தவையே தவிர, கட்டமைப்பு ரீதியானவை அல்ல என்றும், அவர்களின் அரசியல் பயணங்கள் அடிப்படை ரீதியாக வேறுபட்டவை என்றும் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

பொதுவான கருப்பொருளாக 'அதிகார எதிர்ப்பு' நிலைப்பாடு பாரம்பரிய அரசியல் கட்டமைப்புகளுக்கு மாற்றாக தங்களை முன்னிறுத்திக் கொள்வது இவர்களுக்கு இடையிலான மிக முக்கியமான ஒப்பீட்டுப் புள்ளிகளில் ஒன்றாகும். தமிழகத்தின் நீண்டகால ஆதிக்க சக்திகளாக விளங்கும் அரசியல் வாரிசுகள் மற்றும் பிராந்தியக் கட்சிகளை நிராகரிக்கும் ஒரு முயற்சியாகவே தமிழக வெற்றி கழகத்தின் ஊடான விஜய்யின் அரசியல் வருகை அமைந்துள்ளது.

அதேபோல், இலங்கை அரசியலில் அநுர குமாரவின் எழுச்சிஅரசியல் சலுகைகள், ஊழல் மற்றும் நிறுவனச் சீரழிவு ஆகியவற்றிற்கு எதிரான நீண்டகால விமர்சனங்களால் தூண்டப்பட்டது. இது அவரது கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன மற்றும் அவர் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் சித்தாந்தத்தில் வேரூன்றிய செய்தியாகும். அவரது ஜனாதிபதி பதவி என்பது, வெறும் பேச்சளவில் இருந்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் ஒரு பரிசோதனையாக, எதிர்க்கட்சி அரசியலில் இருந்து ஆட்சி நிருவாகத்துக்கு மாறிய ஒரு மாற்றத்தை பிரதிபலிக்கிறது.

இரு தலைவர்களும் இளைஞர்கள் மற்றும் முதன்முறை வாக்காளர்களிடமிருந்து குறிப்பிடத்தக்க ஆதரவைப் பெறுகின்றனர். விஜய்யின் அரசியல் செய்திகள் வெளிப்படைத்தன்மை, சமூக நீதி மற்றும் ஆட்சிச் சீர்திருத்தம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன் இருப்பினும், அவரது கட்சி தார்மீக ரீதியாக வலுவடைந்து வரும் நிலையில், கொள்கை ரீதியான கட்டமைப்பு இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளது.

இதற்கு மாறாக, அநுர குமார பல தசாப்த கால கட்சி சித்தாந்தம் மற்றும் பாராளுமன்ற ஈடுபாட்டால் உருவாக்கப்பட்ட மிகவும் நிறுவப்பட்ட அரசியல் திட்டத்தைக் கொண்டுள்ளார்.

அவரது நிர்வாகம் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், நிறுவனச் சீர்திருத்தம் மற்றும் அரசு நிர்வாகத்தை மறுசீரமைப்பதில் கவனம் செலுத்துகிறது. இது தமிழக வெற்றி கழகத்தின் வளர்ந்து வரும் தளத்தை விட விரிவான கொள்கை கட்டமைப்பைக் கொண்டுள்ளது.

மேலோட்டமான ஒற்றுமைகள் இருந்தபோதிலும், இரு தலைவர்களுக்கும் இடையே கணிசமான சித்தாந்த மற்றும் கட்டமைப்பு வேறுபாடுகள் இருப்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அநுர குமாரவின் அரசியல் அடையாளம் ஜே.வி.பி-யின் வரலாற்று ரீதியான இடதுசாரி சிந்தனையில் ஊறியது. இது அரசின் தலையீடு, வளப்பகிர்வு மற்றும் பொருளாதார சீர்திருத்தம் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. அவரது கொள்கை அணுகுமுறை, ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் நிறுவன மறுசீரமைப்பிற்கும் இடையில் ஒரு சமநிலையை ஏற்படுத்தும் முயற்சியாகும்.

ஆனால், விஜய்யின் அரசியல் அடையாளம் இன்னும் பரிணமித்துக் கொண்டிருக்கிறது. அவரது இயக்கம் தற்போது தெளிவான கொள்கை கட்டமைப்பை விட, பரந்த அளவிலான சீர்திருத்தக் கருத்துக்களையே அதிகம் நம்பியுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட ஓர் அரசியல் சக்தியாக, தமிழக வெற்றி கழகம் தனது தலைமைத்துவ ஈர்ப்பை விரிவான கொள்கைகளாகவும் ஆட்சி கட்டமைப்புகளாகவும் மாற்றும் செயல்பாட்டில் இன்னும் உள்ளது.

மற்றொரு பெரிய வித்தியாசம் நிறுவன அனுபவத்தில் உள்ளது. அநுர குமார ஒரு நாட்டின் தலைவராக, நிர்வாக அதிகாரம் கொண்டு சிக்கலான ஆட்சி சவால்களையும் சர்வதேச கடப்பாடுகளையும் கையாண்டு வருகிறார். விஜய் இன்னும் அரசியல் அணி திரட்டலின் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளார் இங்கே அவரது தாக்கம் நிர்வாகப் பொறுப்பை விட மக்களின் செல்வாக்காலேயே அதிகம் இயக்கப்படுகிறது.

அரசியல் மாற்றத்தின் இரண்டு மாதிரிகள்

இந்த இருவருக்கு இடையிலான ஒப்பீடு, தெற்காசிய பிராந்தியத்தின் ஒரு பரந்த போக்கைப் பிரதிபலிக்கிறது: பாரம்பரிய கட்சிகளுக்கு மாற்றாக தங்களை நிலை நிறுத்திக் கொள்ளும் வழக்கத்திற்கு மாறான அரசியல்வாதிகளின் எழுச்சியே அது.

இருப்பினும், இவர்களது பொறுப்புகளின் தன்மை இரண்டு வெவ்வேறு மாதிரிகளை விளக்குகின்றன. அநுர குமார, எதிர்க்கட்சி அரசியலில் இருந்து ஆட்சி முறைக்கு மாறிய ஒரு மாற்றத்தைப் பிரதிபலிக்கிறார்ஊ இங்கே சீர்திருத்த வாக்குறுதிகள் பொருளாதார மற்றும் நிறுவனத் தடைகளுக்கு எதிராக சோதிக்கப்படுகின்றன. விஜய், ஒரு நட்சத்திர அந்தஸ்தில் இருந்து அரசியல் அணிதிரட்டலுக்கு மாறிய மாற்றத்தைப் பிரதிபலிக்கிறார் இங்கே பொதுமக்களின் உணர்வுகள் ஒரு நிறுவன அரசியல் மூலதனமாக மாற்றப்பட்டு வருகின்றன.

இருவரும் தத்தமது அரசியல் சூழலைத் தொடர்ந்து வடிவமைத்து வரும் நிலையில், இவர்களுக்கு இடையிலான உண்மையான ஒற்றுமை என்பது வெறும் பேச்சில் இல்லை வரும் ஆண்டுகளில் அவர்கள் ஆட்சி முறை, கொள்கை அமலாக்கம் மற்றும் நிறுவனப் பொறுப்புக்கூறல் போன்ற சவால்களை எவ்வாறு கையாள்கிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**(சாணக்கயா, பல்ஸ்லைன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனநிலை மாற வேண்டும்!

பா.சக்திவேல்

ஒரு முறை பயன்படுத்திவிட்டு தூக்கியெறியும் பொருள்களின் எண்ணிக்கையும், கலாசாரமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதில் சாதகங்கள் என ஒருசில சொல்லப்பட்டாலும் பாதகங்கள் பல இருப்பதைப் பரிசீலிக்க வேண்டும். முன்பு பள்ளிகளில் மை நிரப்பி எழுதும் எழுதுகோல் ஆசிரியர்களால் பாராட்டப்பட்டது. அவர்களும் அன்று அதைத்தான் பயன்படுத்தினார் கள்.


எழுத்தை அழகாக, நிறுத்தி எழுதுவதற்கு மை நிரப்பும் எழுதுகோல்தான் உகந்தது என்று மாணவர்களை மை நிரப்பும் எழுதுகோலைப் பயன்படுத்த ஆசிரியர்களே உற்சாகப்படுத்தினர் வற்புறுத்தினர்.

மாணவர்கள், சொந்தமாக மை குடுவை வாங்க இயலாமல் பத்து காசுக்கு பெட்டிக் கடைகளில் மை நிரப்பிச் சென்ற நாள்கள்தான் அதிகம். அவசர காலங்களில் பக்கத்தில் அமர்ந்திருக்கும் மாணவரிடம் கடனாக சில சொட்டுகள் மை இரவல் வாங்கி வகுப்பறையில் எழுதிய அனுபவமும் பலருக்கு உண்டு, பந்துமுனை எழுதுகோலைப் பயன்படுத்துவோரும் ஓர் எழுதுகோலை வாங்கி அதில் மை தீர்ந்துவிட்டால் எழுதுகோலை அப்படியே வைத்துக் கொண்டு, அதில் உள்ள மை நிரப்பிய நுண்குழாயை மட்டும் புதிதாக மாற்றி பயன்படுத்துவர்.

ஆனால், இன்று அதிக அளவில் மை குடுவைகள் கடைகளில் கிடைப்பதில்லை, பந்துமுனை எழுதுகோலுக்கு பயன்படும் மை நிரப்பிய நுண்குழாயும் கிடைப்பதில்லை. சராசரியாக 10 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை கொடுத்து வாங்கும் பந்துமுனை எழுதுகோல் ஒருமுறை பயன்படுத்திவிட்டு குப்பையில் தூக்கி எறியப்படுகிறது. ஏன் இந்த நிலை என்று கேட்டால் மக்களுக்கு நேரமில்லையாம்... மை நிரப்பி எழுதுகோலைப் பயன்படுத்த பொறுமையில்லையாம்...

கையிலே பையை எடுத்துக்கொண்டு கடைக்குப் போய் பொருள்கள் வாங்கிய காலம் மறைந்து வெறுங்கையுடன் சென்று பல நெகிழிப்பை கொத்துகளோடு வீடு வந்து சேரும் நிலை இன்று வந்துவிட்டது. வீட்டு வாசலுக்கே பொருள் அனுப்பும் நிறுவனங்களும் நெகிழிப் பையை விட்ட பாடில்லை.

சாதாரணமாக, 1,000 நபர்கள் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்புகளில் ஒரு சில வாரங்களில் ஒரு டன் நெகிழிக் குப்பைகள் சேர்வதாக சூழலியலாளர்கள் சொல்கின்றனர்.



மரங்களைக் கொண்டு செய்யப்பட்ட மேசை, நாற்காலி, உள்ளிட்ட அனைத்து வீட்டு உபயோகப் பொருள்களும், மூங்கில் போன்ற பொருள்களால் செய்யப்படும் சாமான்களும் தலைமுறைகளைத் தாண்டி பல வீடுகளில் இருந்து உழைப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இருப்பினும், பிளாஸ்டிக் பொருள்கள் இலகுவாக, மலிவாகக் கிடைப்பதால் தேவை இருக்கிறதோ இல்லையோ, அவற்றை வீடு முழுவதும் வாங்கிக் குவிக்கிறோம்.

ஒருசில ஆண்டுகளில் அவை உடைந்து போனதும் நமக்குக் கவலை இல்லை. இருக்கவே இருக்கு குப்பைத் தொட்டி அல்லது ஊருக்கு வெளியே புறவழிச்சாலை, அங்கு சென்று வீசிவிடுவோம். அல்லது சாலையில் இரவு நேரத்தில் தூக்கி எறிந்து விட்டு ஏதும் அறியாதவர்போல இருந்து விடுவோம்.

ஒரு கைப்பேசியை வாங்கி அது எவ்வளவு உழைக்கிறதோ அதுவரைப் பயன்படுத்தி பழுது ஏற்பட்டால் அவற்றை பழுதுநீக்கம் செய்யக் கொடுத்து நீண்ட காலம் பயன்படுத்திய மக்கள் மாறிவிட்டனர். தீபாவளி, பொங்கல், புத்தாண்டு, பண்டிகைக் காலங்கள் என்று வந்துவிட்டால் எப்படி புதுத்துணி வாங்குகிறார்களோ, அதுபோல கைப்பேசியையும் சிலர் புதிது புதிதாக வாங்கி பழையவற்றை தூக்கியெறிகின்றனர். இது தொலைக்காட்சி, மடிக்கணினி, கணினி உள்ளிட்ட அனைத்து மின்சாதனப் பொருள்களுக்கும், குளிர் சாதனப்பெட்டி, அரைவை இயந்திரம் உள்ளிட்ட அனைத்துக்கும் பொருந்தும்.

இப்போதெல்லாம் பழுது நீக்கும் கடைகளும் குறைந்து விட்டன. அப்படியே அங்கு தேடிச் சென் றாலும் அவர்கள் புதிதாக வாங்கிக் கொள் ளுமாறு நமக்கு அறிவுரை கூறுகின்றனர். உதிரி பாகங்களும் சில பொருள்களுக்கு உற்பத்தியாளர்கள் தருவதில்லை.

புதிது புதிதாக மக்கள் வாங்கிக்கொண்டே இருந்தால் அரசுக்கு நிறைய வரி வரு வாய் கிடைக்கும் என்று அவர்களும் இதைக் கண்டுகொள் வதில்லை. நுகர் வோர் தேவைக்கு அதிகமாக வாங்கிப் பணத்தை வீண டிப்பதற்கு வலிந்து திணிக்கப்படுகிறார் கள். கேட்டால் மக்களின் வாங்கும் திறன் அதிகரித்து விட்டது என்பார் கள் தேவையில்லாமல் ஏன் வாங்க வேண்டும்?

கனிகளை உண்பவர்கள் அதன் விதைகளை மண்ணில் இடுவது அந்த கனிக்கும் அந்த வகை இனத்துக்கும் செய்யும் நன்றிக் கடன்.

அதுகூடப் புரியாமல் பழ விதைகளைக் குப்பையில் வீசுவோரும் இருக்கிறார்கள். ஏனெனில், நாம் எதையும் குப்பையில் வீசிப் பழக்கப்பட்டவர்கள்.

இப்படி எல்லாவற்றையும் தமக்குத் தேவையானவற்றை ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பின்புலம் நம் குடும்ப உறவுகளிலும், சுற்றத்தாரிடமும், நட்புகளிலும், அலுவலக சக பணியாளர்களிடம், அன்றாடம் சந்திக்கும் அனைத்து உயிர்களிடமும் காட்டத் துணிந்துவிட்ட ஓர் இறுக்கமான மனநிலைக்கு நம்மைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிவருகிறது.

ஒரு பொருள் படைக்கப்பட்டது அதன் முழுப் பயன்பாடு எய்தும்போதுதான் அது படைக்கப்பட்டதற்கான நோக்கம் முழுமை அடைந்ததாகக் கருதப்படும்.

பூமியில் எந்த ஒன்றையும் மனிதனால் புதிதாக உருவாக்க முடியாது. ஒன்று இன்னொன்றாக மாறும் தத்துவத்தில்தான் உலகம் இயங்கி வருகிறது. இந்தத் தொடர் சங்கிலியை, சுழற்சக்கரத்தை மனிதன் உடைக்க நினைப்பது ஆபத்தானது.

மறுசுழற்சி, மீட்டுருவாக்கம் என்பவை இன்றைய அத்தியாவசியத் தேவை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எதையும் தூக்கியெறியும் மனநிலையை மாற்றிக் கொள்வோம் உரிய முறையில் பயன்படுத்துவோம் உயிர்களையும் பொருள்களையும் நேசிப்போம் மனிதத்தை சுவாசிப்போம்.

(தினமணி)

## இந்தவார ராசிபலன் 17.05.2026 - 23.05.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 03

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பிரதமை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. உங்களால் சுற்றி இருப்பவர்கள் பயன் பெறுவர். எந்த ஒரு விஷயத்திலும் உடனடி முடிவுகள் என்பது சற்று சிரமத்தினைத் தரக்கூடும். குடும்ப பெரியவர்களுடன் கலந்து ஆலோசித்து பின்னர் முடிவெடுத்துச் செயல்படுவது நலம். நண்பர்கள் சில நேரங்களில் விரோதமாக செயல்படலாம். பெற்றோர்களின் அறிவுரை உதவியாக இருக்கும். உத்யோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பர். தொழில்மந்த நிலை இருக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. பொதுக் காரியங்களில் உங்களின் செயல்பாடுகள் சிறப்பான பலனை பெற்றுத் தரும். மனக்கவலைகள் அனைத்தும் மறையும். கணவன் மனைவி இடையே நெருக்கம் உண்டாகும். வாகன பயணத்திலும், சாலையை கடக்கும் போதும் கவனம் தேவை. எந்த விஷயத்திலும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது. இரவு நேர பயணங்களை குறைத்துக்கொள்ளவும். உத்யோகத்தில் ஈகோ பிரச்னையை தவிர்க்கவும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பாதையில் செல்லும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசி நேயர்களே. இந்த வார பலன்படி. குடும்ப பொறுப்புகள் பெரிய சுமையாக வரும். உங்கள் மீது விமர்சனங்களைப் பற்றி கவலைகொள்ள வேண்டாம். குடும்ப வேலை காரணமாக அண்டை மாநிலங்களுக்கு பயணம் செல்ல வேண்டிவரும். உடன்பிறந்தோர் ஆதரவாக இருப்பர். உறவினர்களால் ஒரு சில பிரச்னைகளை சந்திக்க நேரலாம். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான தீர்ப்பு வரும். குடும்பத்தில் அவ்வப்போது சலசலப்பு தோன்றி மறையும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

மிதுன ராசி நேயர்களே. இந்த வார பலன்படி. குடும்ப பொறுப்புகள் பெரிய சுமையாக வரும். உங்கள் மீது விமர்சனங்களைப் பற்றி கவலைகொள்ள வேண்டாம். உடன்பிறந்தோர் ஆதரவாக இருப்பர். உறவினர்களால் ஒரு சில பிரச்னைகளை சந்திக்க நேரலாம். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான தீர்ப்பு வரும். குடும்பத்தில் அவ்வப்போது சலசலப்பு தோன்றி மறையும். உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசி அன்பர்களே. இந்த வார ராசி பலன் படி. குடும்ப பெரியோர்களின் அன்பும். ஆசியும் கிட்டும். நீங்கள் திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் இனிதே நடக்கும். உறவினர்கள் மத்தியில் மதிப்பு உயரும். குடும்பத்தில் விட்டுக்கொடுத்து போவது நல்லது. நடந்து முடிந்த விஷத்தை நினைத்து இப்போது கவலை பட்டு எந்த பயனும் இல்லை. மன நிம்மதிக்காக தினமும் தியானம் செய்வது நல்லது. உத்யோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். தொழில். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசி நேயர்களே. இந்த வார ராசி பலன் படி. குடும்ப பிரச்சனைகளுக்கு சுமுகமான முறையில் தீர்வு கிடைக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல தகவல் வரும். குடும்பத்தில் சுபிட்சமான நிலை உண்டாகும். வெளி உணவுகளை அறவே தவிர்க்கவும். கடன் நெருக்கடிகள் குறையும். உறவினர்களிடையே இருந்து வந்த மன கசப்பு நீங்கும். புதிய முயற்சிகள் எதிலும் தற்சமயம் ஈடுபட வேண்டாம். உத்யோகத்தில் புதிய முயற்சிகளை மேற்கொள்ளலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள நுணுக்கங்கள் புரியவரும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. உங்கள் செயல்களில், வேகமும். விவேகமும் இருக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். முக்கிய காரியத்தில் ஏற்பட்ட முக்கிய தடைகள் நீங்கும் பிரயாணம் செய்வதிலும் ஆர்வம் உண்டாகும். யாரிடத்திலும் வீண் வாக்குவாதம் செய்ய வேண்டாம். நீண்ட தூர பயணங்களை தவிர்க்கவும். குடும்பத்திற்கு தேவையான விஷயங்களை செய்து தர முடியும். உத்யோகத்தில் பாராட்டு மழை உண்டு.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசி நேயர்களே. இந்த வார பலன்படி. நீண்ட நாள் பிராத்தனைகளை தாமதமின்றி நிறைவேற்ற முடியும். மனதில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கி மனநிம்மதி ஏற்படும். உறவினர்களால் தர்மசங்கடமான சூழலுக்கு ஆளாக நேரிடும். குடியிருக்கும் வீட்டை மற்ற வேண்டிய சூழல் வரும். பழைய கடனை அடைப்பது குறித்த யோசனை வரும். உடல் நிலை முன்பை விட இப்போது நன்றாக இருக்கும். மற்றவர்களிடம் பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை. எதிரிகள் உங்களை கண்டு ஒதுங்கி நிற்பர்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள நல்ல வாய்ப்புகள் வரும். பொருளாதார ரீதியான பிரச்னைகளை சந்திக்கக் கூடும். வெளிவட்டார தொடர்புகள் அதிகரிக்கும். வாகன பராமரிப்பு செலவுகள் கூடும். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பெற்றோர்களின் ஆலோசனை கிடைக்கும். மற்றவர்களுக்கு ஜாமீன் போடுவதால் வீண் பழி ஏற்படலாம். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசி நேயர்களே. இந்த வார பலன்படி. மனோதைரியமும். தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். திருமண பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். நெருங்கிய உறவினர்களுடன் சுமுக உறவு காணப்படும். புது வீடு மாற்றம் ஏற்படும். எதிர்பாரா மருத்துவ செலவுகள் வரும். உணவு கட்டுப்பாடு அவசியம். அடுத்தவர் விவகாரத்தில் தலையிடுவதை தவிர்க்கவும். பிரபலங்களின் தொடர்பும், அவர்கள் மூலம் நிறைய ஆதாயமும் கிடைக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. பேச்சு திறமையால் எந்த ஒரு காரியத்தையும் சாதிக்க முடியும். நீங்கள் விரும்பியது போல் எல்லாம் நல்ல முறையில் நடக்கும். மனதில் சந்தோஷமும், தெம்பும் அதிகரிக்கும். திருமண காரியம் விரைவில் கைகூடும். கணவன் மனைவிடையே விட்டுக்கொடுத்தல் அவசியம். பெற்றோர்கள் வழியில் சகாயமும். ஆதரவும் அதிகமாகும். தெய்வ பிராத்தனைகளை நிறைவேற்ற முடியும். உத்யோகத்தில் எதிர்பாராத திருப்புமுனை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் புது முதலீட்டை தவிர்க்கவும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]


மீன ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. புதிய முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் முழு மனதோடு ஈடுபவது நல்லது. ஆன்மீகத்தில் நாட்டம் இருக்கும். வாகனம் யோகம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். குடும்பத்தில் சந்தோஷம் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. எதிரிகளின் தொல்லை சுவடு தெரியாமல் மறையும். வாகன பயணத்தில் எப்போதும் கவனமாக இருக்கவும். பொது காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். உத்யோகத்தில் அமைதி நிலவும். தொழில், வியாபாரத்தில் மேன்மை நிலை உண்டாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு பிறகு கடந்துபோன அரை நூற்றாண்டு !





**தற்போதைய அரசியல் நிலைவரத்துக்கு மத்தியில் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்காக குரல்கொடுப்பது எந்தளவுக்கு விவேகமானது என்பது அரை நூற்றாண்டு கால அரசியல் நிகழ்வுப் போக்குகளை ஒருவர் எவ்வாறு மதிப்பிடுகின்றார் எனபதிலேயே தங்கியிருக்கிறது.**



**வீரகத்தி தனபாலசிங்கம்**

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் இலக்கு ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி (சமஷ்டி) முறையின் அடிப்படையில் தீர்வைக் காண்பது என்பதில் இருந்து 'தமிழீழம்' என்ற சுதந்திரமான தனியரசுக்கான கோரிக்கையாக நகர்ந்ததை குறித்து நிற்கும் வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கடந்த வியாழக்கிழமை சரியாக அரை நூற்றாண்டு நிறைவடைந்தது.

தமிழர் அரசியலின் திசை மார்க்கத்தை மாத்திரமல்ல, இலங்கையின் அரசியல் போக்கையும் மாற்றியமைத்த அந்த தீர்மானம் 1976 மே, 26 வட்டுக்கோட்டையில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

தனிநாட்டுக் கோரிக்கையின் கொள்கைப் பிரகடனமாக அமைந்த தீர்மானத்திற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களின் அங்கீகாரத்தைக் கோருவதற்கு 1977 ஜூலை பொதுத் தேர்தலை தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி பயன்படுத்தியது. இரு மாகாணங்களிலும் 18 தொகுதிகளில் அதன் வேட்பாளர்களுக்கு கிடைத்த மகத்தான வெற்றியை வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையாக கூட்டணி எடுத்துக் கொண்டது.

பாராளுமன்ற அரசியல் பாதை மூலமாக தனிநாட்டை அடைய முடியாது என்பது கூட்டணியின் படித்த அரசியல் தலைவர்களுக்கு தெரியாததல்ல. அவர்கள் எந்தவொரு அரசியல் போராட்டத் திட்டமும் தந்திரோபாயமும் இல்லாமல் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வத்து மக்களை குறிப்பாக, தமிழ் இளைஞர்களை உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு உள்ளாக்கிய தவறுக்காக நாளடைவில் பெரிய விலையைச் செலுத்த வேண்டியேற்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் தலைமைத்துவம் ஆயுதமேந்திய தமிழ்ப் போராளிக் குழுக்களின் கைகளுக்குச் சென்ற பின்னர் மூண்ட சுமார் மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரில் இலங்கை ஆயுதப் படைகளுக்கு எதிராக அவர்களால் தொடர்ச்சியாக கணிசமான காலத்துக்கு வியக்கத்தக்க வெற்றிகளை பெறக்கூடியதாக இருந்த போதிலும், தனிநாட்டுக்கான போராட்டத்தின் பிரதான தளப்பிரதேசமாக விளங்கிய வன்னி 2009 மே மாதம் இலங்கைப் படைகளிடம் வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து மாற்றம் கண்ட அரசியல் - இராணுவ நிலக்காட்சி வட்டுக்கோட்டை தீர்மானத்தை கிரகணம் செய்தது.

என்றாலும், ஒற்றையாட்சி அரசொன்றை தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை என்பதற்கான 'சான்றாகவும்' வடக்கு, கிழக்கு தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நியாயப்படுத்துவதற்கான ஆவணமாகவும் அரசியல் விவாதங்களில் அந்த தீர்மானத்தை தமிழ் தேசியவாத அரசியல் சக்திகள் முன்வைத்து வந்திருக்கின்றன.

1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு அன்றைய ஜெயவர்தன அரசாங்கம் அரசியலமைப்புக்கு கொண்டுவந்த ஆறாவது திருத்தம் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை சட்டவிரோதமானதாக்கிய போதிலும், வட்டுக்கோட்டை தீர்மானத்தை தமிழ் அரசியல்வாதிகள் மேற்கோள் காட்டிப் பேசிவந்திருக்கிறார்கள். அது தொடர்பில் நடைமுறையில் எதையும் தங்களால் செய்ய முடியாது என்பதும் அவர்களுக்கு தெரியும்.

அந்த தீர்மானத்தின் 40 வருட நிறைவின்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் அன்றைய தலைவர் காலஞ்சென்ற இராஜவரோதயம் சம்பந்தன், "1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையையும் மக்களால் தெரிவு செய்யப்படும் மாகாண சபைகளை அமைப்பதற்காக அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட்ட 13 வது திருத்தத்தையும் தொடர்ந்து வட்டுக்கோட்டை தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் குறித்துப் பேசுவதை நாம் நிறுத்திவிட்டோம். அந்த நிலைப்பாட்டில் இருந்து நாம் விலகி விட்டோம். பெரும்பான்மையான தமிழ்க் கட்சிகள் "ஐக்கியப்பட்டதும் பிளவுபடாததுமான இலங்கை கட்டமைப்பு ஒன்றுக்குள் செயற்படுவதற்கு இணங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களுக்கு பெருமளவான அதிகாரப் பகிர்வும் சுயாட்சியும் தேவைப்படுகிறது" என்று கூறினார்.( தி இந்து, 2016 மே 14)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தலைமையிலான அரசாங்க காலத்தில் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையொன்று முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருந்த வேளையிலேயே சம்பந்தன் இதைச் சொன்னார். அந்த செயன்முறை தமிழர் பிரச்சினைக்கு முடிவைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கையை அவர் கொண்டிருந்த நேரம் அது. முன்னைய தமிழ்த் தலைவர்களைப் போன்றே சம்பந்தனும் தனது மக்களுக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க முடியாமல் ஏமாற்றத்துடனேயே இறந்து போனார்.

தற்போது முற்றிலும் வேறுபட்ட ஒரு சூழ்நிலையில், அதாவது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டிய அவசியம் குறித்து சிந்திக்கத் தயாரில்லாத ஒரு அரசாங்கத்தின் கீழ், அதனால் உறுதியளிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை முன்னெடுக்கப்படாத நிலையில், வட்டுக்கோட்டை தீர்மானம் பற்றி தமிழ் அரசியல் சக்திகள் மத்தியில் இருந்து கருத்துக்கள் வெளிவருகின்றன.

தற்போது உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்நோக்கும் பெருவாரியான பிரச்சினைகளுக்கு மத்தியில் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை ஒன்று முன்னெடுக்கப்படக்கூடிய சாத்தியங்கள் குறித்து வலுவான சந்தேகம் கிளம்பியிருக்கின்ற போதிலும், புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டியவை என்று தாங்கள் கருதுகின்ற யோசனைகளை தயாரிப்பதில் தமிழர் தரப்பில் ஏட்டிக்குப் போட்டியாக முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் பயனறுதியுடைய அரசியல் தீர்வு ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை என்பதால் ஒற்றையாட்சி நீடிக்கும் வரை வட்டுக்கோட்டை தீர்மானம் மாத்திரமே தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய ஒரேயொரு நியாயமான தெரிவாக இருக்க முடியும் என்ற கருத்தை சில தமிழ் அரசியல்வாதிகள் முன்வைக்கிறார்கள்.

போரின் முடிவுக்கு பிறகு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான அவசியம் இல்லை என்ற எண்ணத்தில் தென்னிலங்கை அரசியல் சமுதாயம் இருக்கும் நிலையில், அரைகுறையான அதிகாரங்களுடனான மாகாண சபைகளும் பல வருடங்களாக இயங்காமல் இருக்கும் நிலையில் தங்களுக்கு விட்டுவைக்கப்பட்டிருக்கும் தெரிவு என்ன என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனால், மீண்டும் அவர்கள் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு வரலாற்று மற்றும் அரசியல் பெறுமதி இருக்கிறது என்று சிந்திக்க முற்படுவதை தடுப்பது முற்று முழுதாக அரசாங்கத்தின் செயற்பாடுகளிலும் அணுகுமுறையிலுமே தங்கியிருக்கிறது.

அதேவேளை, தற்போதைய அரசியல் நிலைவரத்துக்கு மத்தியில் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்காக குரல்கொடுப்பது எந்தளவுக்கு விவேகமானது என்பது அரை நூற்றாண்டு கால அரசியல் நிகழ்வுப் போக்குகளை ஒருவர் எவ்வாறு மதிப்பிடுகின்றார் எனபதிலேயே தங்கியிருக்கிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஊழல் வழக்குகளைத் தொடர்வதில் உள்ள பாரிய சவால்கள்!



கலாநிதி
ஜெகான் பெரேரா

சிறிலங்கன் ஏர்லைன்ஸ் எயார்பஸ் கொடுக்கல் வாங்கலில் மிக முக்கியமான சந்தேக நபரான கபில சந்திரசேனவின் மரணம் பொதுமக்களிடையே பெரும் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. பெரும் நட்டத்தில் இயங்கும் தேசிய விமான சேவையின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரியான அவர், மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டார். இது குறித்து பொலிஸார் தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர்.

2013-ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட சர்ச்சைக்குரிய எயார்பஸ் விமான கொள்வனவு ஒப்பந்தம் தொடர்பாக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் அவர் சமீபத்தில் கைது செய்யப்பட்டிருந்தார். அவரது மரணத்திற்கான காரணம் என்ன? அல்லது அவர் தற்கொலை செய்து கொண்டாரா? என்பது குறித்து பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தத் தீர்க்கப்படாத மரணம், இத்தகைய பொறுப்புக்கூறல் முயற்சிகளில் உள்ள பாரிய ஆபத்துக்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.




ஊழல் மற்றும் தண்டனையின்மையின் அடித்தளத்தில் ஒரு வளமான எதிர்காலத்தை இலங்கையால் கட்டியெழுப்ப முடியாது. பொதுச் செல்வத்தைச் சூறையாடியவர்கள் பொறுப்புக்கூற வைக்கப்பட்டு, அதற்கு இடமளித்த அமைப்புகள் தகர்க்கப்படாவிட்டால், அதே அழிவுச் சுழற்சியை நாடு மீண்டும் மீண்டும் சந்திக்க நேரிடும்.

சந்திரசேனவின் மரணம் தொடர்பான நிச்சயமற்ற நிலை, ஊழல் விசாரணைகள் மற்றும் பொது ஊழல்களுடன் தொடர்புடைய ஏனைய மர்ம மரணங்கள் குறித்த பொதுமக்களின் நினைவுகளை மீண்டும் கிளறியுள்ளது. அவற்றில் ஒன்று, சிறிலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் அதிகாரியும், எயார்பஸ் கொடுக்கல் வாங்கலில் இடம்பெற்ற முறைகேடுகளை பகிரங்கமாக விமர்சித்தவருமான ரஜீவ ஜயவீரவின் மரணமாகும். அவர் தனது தந்தையான மறைந்த முன்னாள் இராஜதந்திரி ஸ்டான்லி ஜயவீரவின் வழியைப் பின்பற்றி, நல்லாட்சி நடைமுறைகளுக்காகப் பணியாற்றியவர்.

ரஜீவ ஜயவீர 2020 ஆம் ஆண்டில் கொழும்பு சுதந்திர சதுக்கத்திற்கு அருகில் சடலமாக மீட்கப்படுவதற்கு முன்னர், இந்த ஒப்பந்தத்தில் உள்ள முறைகேடுகள் குறித்து தொடர்ச்சியாக கட்டுரைகளை எழுதியிருந்தார். உயர்பாதுகாப்பு வலையமான அந்தப் பகுதியில் இருந்த கண்காணிப்புக் கமராக்கள் அந்த நேரத்தில் செயலிழக்கச் செய்யப்பட்டிருந்தன. அவர் தற்கொலை செய்துகொண்டாரா என்ற கேள்விக்கு அப்போது திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை.

சந்திரசேனவின் மரணத்தைப் பற்றிய சர்ச்சைகள், எயார்பஸ் ஒப்பந்தத்தினால் நாட்டுக்கு ஏற்பட்ட பாரிய சேதத்திலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்புகின்றன. இந்த விமான ஒப்பந்தத்தின் மதிப்பு, 2023 ஆம் ஆண்டில் வங்குரோத்து அடைந்த பொருளாதாரத்தை நிலைப்படுத்த இலங்கை அவசரமாக நாடிய சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவிக்கு சமமானதாகும். இலங்கையின் சர்வதேச நாணய நிதியக் கடனுதவி 4 ஆண்டுகளில் சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். பொறுப்பற்றதும் ஊழல் நிறைந்துமான முடிவுகள் நாட்டுக்கு ஏற்படுத்திய இழப்புகளின் அளவை இந்த ஒப்பீடு காட்டுகிறது. இத்தகைய சம்பவங்கள் இனி ஒருபோதும் நடக்கக் கூடாது.

இலங்கைக்கு வெளியே நடத்தப்பட்ட விசாரணைகளின் காரணமாகவே எயார்பஸ் கொடுக்கல் வாங்கலில் உள்ள ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்தன. 2020 ஆம் ஆண்டில், பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்க அதிகாரிகளால் நடத்தப்பட்ட உலகளாவிய ஊழல் விசாரணைகளைத் தீர்ப்பதற்காக எயார்பஸ் நிறுவனம் 3.6 பில்லியன் யூரோக்களுக்கும் அதிகமான அபராதத்தைச் செலுத்த ஒப்புக்கொண்டது. ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக இலஞ்சம் வழங்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக இலங்கையும் அடையாளப்படுத்தப்பட்டது.

சுமார் 2.3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆறு ஏ330 விமானங்களையும் நான்கு ஏ350 விமானங்களையும் கொள்வனவு செய்வதே இந்த ஒப்பந்தமாகும். இதைப் பெறுவதற்காக எயார்பஸ் நிறுவனம் சுமார் 16 மில்லியன் அமெரிக்க டொலர் இலஞ்சம் வழங்கியதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. நீதிமன்ற சமர்ப்பணங்களின் பிரகாரம் இதில் குறைந்தது 2 மில்லியன் அமெரிக்க டொலர் புரூணையில் பதிவு செய்யப்பட்ட ஒரு போலி நிறுவனம் மூலமாகவும், சிங்கப்பூர் வங்கி கணக்குகள் வழியாகவும் மறைந்த விமான நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரிமற்றும் அவரது மனைவியுடன் தொடர்புடைய கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் மொத்த மதிப்புடன் ஒப்பிடும் போது இந்தத் தரகுப் பணம் சிறியதாகத் தோன்றினாலும், அதன் விளைவுகள் மிகவும் பாரதூரமானவை. தீர்மானம் எடுப்பவர்களுக்கு இரகசியமாக வழங்கப்படும் சில மில்லியன் டொலர்கள், நாட்டை பல தசாப்தங்களாக பல நூறு மில்லியன் அல்லது பில்லியன் கணக்கான டொலர்கள் கடனில் தள்ளக் கூடும் என்பதை இது காட்டுகிறது.

அதனால்தான் ஊழல் என்பது வெறும் ஒழுக்கப் பிரச்சினை மட்டுமல்ல. இது சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் மீதான நேரடிப் பொருளாதாரத் தாக்குதலாகும். ஊழலால் இழக்கப்படும் பணம் பாடசாலைகள், வைத்தியசாலைகள், கிராமப்புற வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கத்திற்கு கிடைக்காமல் போகிறது. இறுதியில், இந்தச் சுமை எந்தப் பலனையும் அனுபவிக்காத சாதாரண குடிமக்கள் மீதே சுமத்தப்படுகிறது.

சிறிலங்கன் ஏர்லைன்ஸ் கொடுக்கல் வாங்கலானது, பல ஆண்டுகளாக நடந்து வரும் ஊழல் மற்றும் தேசிய வளங்களைத் தவறாகப் பயன்படுத்தும் ஒரு விரிவான போக்கின் அடையாளமாகும். இது ஒரு உதிரிச் சம்பவம் அல்ல. கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைக் கட்டுமானம் போன்ற பல பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்கள், அரசியல் செல்வாக்கு மிக்கவர்களையும் அவர்களது சகாக்களையும் வளப்படுத்திய அதேவேளையில், நாட்டுக்கு பாரிய கடன்களைச் சுமத்தியுள்ளன.

உரக் கொள்வனவு, மருந்துப் பொருட்கள் மற்றும் எரிசக்தி ஒப்பந்தங்களிலும் இதே போன்ற முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. தரமற்ற மருந்துகள் அதிக விலைக்கு இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள், நிதி இழப்புகளை மட்டுமல்லாது பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளன.

முந்தைய அரசாங்கங்கள் எவையும் விசாரணை நடத்த முயற்சி செய்யாத நிலையில் பாரிய ஊழல் வழக்குகளை விசாரணை செய்ய தற்போதைய அரசாங்கம் உறுதியாக இருப்பதாகத் தெரிகிறது. கருவூலத்தைச் சூறையாடி நாட்டை வங்குரோத்தாக்கியவர்கள் சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டும். திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் கணிசமான பொது ஆதரவு உள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தனது மே தின உரையில், சுமார் 14 ஊழல் வழக்குகள் இந்த நீதிமன்றத்தில் முடிவடையும் தருவாயில் உள்ளதாகக் கூறி, தீர்ப்புகள் வரும்போது பொதுமக்கள் அதனைப் பாராட்ட வேண்டும் என அழைப்பு விடுத்தார். இத்தகைய கருத்துக்கள் நீதித்துறையின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் என்றும் அரசியல் தலைமைக்கும் நீதிமன்றங்களுக்கும் இடையிலான பிரிவினையை (அதிகார வேறாக்கலை) மழுங்கடிக்கும் என்றும் அரசியல் எதிர்ப்பாளர்கள் வாதிடுகின்றனர்.

இருப்பினும், ஜனாதிபதியின் கருத்துக்களுக்குப் பின்னால் உள்ள ஆழமான பொது விரக்தி யையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை தற்போது இரண்டு சவால் களை எதிர்கொள்கிறது. முதலாவதாக, சுதந்திரமான நிறுவனங்கள் மற்றும் சட்ட நடைமுறைகள் மூலம் நீதி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். ஊழலுக்கு எதிரான பிரச்சாரங்கள் அரசியலாக்கப்பட்டால், அவை நம்பகத்தன்மையை இழந்துவிடும். இரண்டாவதாக, ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் தண் டனையின்றித் தொடர்ந்தால், நாடு பொருளாதாரச் சரிவு மற்றும் தார்மீகச் சிதைவின் சுழற்சியிலேயே சிக்கியிருக்கும்.

மேலும், போர்க்காலத்துடன் தொடர்புடைய கடந்தகால மனித உரிமை மீறல்களையும் இலங்கை எதிர்கொள்ள வேண்டும். கடத்தல், கப்பம் கோருதல், காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் பாதுகாப் புப் படையினர் சம்பந்தப்பட்ட குற்றச் செயல் கள் குறித்த குற்றச்சாட்டுகள் உள்ளன. இத்தகைய குற்றங்களுக்கு அரசியல் தலைவர்கள் உடந்தையாக இருந்திருந்தால், அவர்களும் சட்டத்தின் முன் பொறுப்புக் கூற வேண்டும்.

குறிப்பிட்டவர்களை இலக்கு வைக்கும் நீதிச் செயன்முறைகள் நாட்டை ஒருபோதும் குணப்படுத்தாது. அரசியல் அந்தஸ்து, இனம் அல்லது நிறுவன அதிகாரம் ஆகியவற்றைக் கடந்து பொறுப்புக்கூறல் அனைவருக்கும் சமமா கப் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஊழல் மற்றும் தண்டனையின்மை காரணமாக இலங்கை மிகக் கடுமையான விலையைக் கொடுத்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவு ஒரே இரவில் நிகழவில்லை. இது பல ஆண்டுகால மோசமான ஆட்சி, பொறுப்பற்ற முடிவுகள், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் பொதுச் செல்வத்தைத் தவறாகப் பயன்படுத்தியதன் விளைவாகும். நாடு முன்னேற வேண்டுமானால், வெறும் பரபரப்பான செய்திகளால் மக்களின் கவனம் திசை திருப்பப்படக் கூடாது. சந்தேகத்திற்கிடமான மரணங்கள் மற்றும் அரசியல் சூழ்ச்சிகள் சில நாட்களுக்குத் தலைப்புச் செய்திகளாக இருக்கலாம்.

ஆனால், நீண்டகாலமாக ஊழல் தழைத்தோங்குவதற்கு வழிவகுத்த அந்த "அமைப்பை" ஒழிப்பதே உண்மையான தேசியப் பணியாகும். ஊழல் மற்றும் தண்டனையின்மையின் அடித்தளத்தில் ஒரு வளமான எதிர்காலத்தை இலங்கையால் கட்டியெழுப்ப முடியாது. பொதுச் செல்வத்தைச் சூறையாடியவர்கள் பொறுப்புக்கூற வைக்கப்பட்டு, அதற்கு இடமளித்த அமைப்புகள் தகர்க்கப்படாவிட்டால், அதே அழிவுச் சுழற்சியை நாடு மீண்டும் மீண்டும் சந்திக்க நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிரபாகரன் இல்லாத பதினேழு ஆண்டுகள்?



யதீந்திரா

திருவேங்கடம் வேலுப்பிள்ளை பிரபாகரன் மூன்று தசாப்தகால ஈழத் தமிழர் அரசியலை, தனது காலடியில் வைத்திருந்த ஒருவர். அவரைப் போன்று ஈழத் தமிழர் அரசியலை தன் முழு ஆளுமைக்குள் வைத்திருந்த ஒருவர் வரலாற்றில் இல்லை. ஈழத் தமிழ் மக்கள் அரசியல் ரீதியில் உச்சமான ஒன்றை அடைந்திருக்க முடியும் என்றால், அது அவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமே சாத்தியப்பட்டிருக்க வேண்டும் - ஆனால் அது நடக்கவில்லை. இதற்கு ஒருவர் மீது குற்றம்சாட்ட முடியும் என்றால் அங்கும் பிரபாகரனின் நாமம்தான் எஞ்சியிருக்கும் - ஏனெனில் அனைத்தும் அவரைச் சுற்றியே இருந்தது. வெற்றியும் அவர்தான் - தோல்வியும் அவர்தான்.

இவ்வாறானதொரு முடிவை அவர் ஊகித்திருப்பார் என்பதை நம்புவது கடினம்தான் - ஆனால் ஒரு இராணுவ நிபுணர், பல யுத்தகளங்களின் வெற்றியை கண்டவர் என்னும் வகையில் யுத்த முடிவின் இறுதித் தருணங்களிலாவது, அவர் தனது முடிவை ஊகித்திருக்கக் கூடும். கிளிநொச்சியின் வீழ்ச்சிக்கு பின்னர் நிச்சயம் அவ்வாறானதொரு அச்சம் விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்குள் ஏற்பட்டிருக்காது என்பதை நம்புவது கடினம். எல்லாம் ஒரு திரைப்பட்டத்தை பார்த்து முடித்ததுபோன்று, முடிந்து போனது.

வெற்றிகளின் வழியாக மட்டுமே தீர்மானிக்கப்படும் அதிகார உலகில், தோற்றவர்களின் குரல்கள் ஒரு பொருட்டல்ல. ஏனெனில் அதிகாரத்தின் மொழி ஒன்றுதான் - அதாவது,முடிந்தால் வெற்றிவாகை சூடு, முடியவில்லையா சரணடை - இல்லாவிட்டால் அழிந்துபோ. இதுவே உலக அதிகார அரசியல் வரலாறு. முன்னர் நான் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டது போன்று, பிரபாகரனின் இறுதி யுத்தம் தோற்கக் கூடாத யுத்தம் ஆனால் அவர் தோற்றுவிட்டார்-தோற்கக் கூடாத யுத்தத்தில் தோற்றுப் போதல் என்பது அழிவுதான். பிரான்சில் வாழ்ந்து, மறைந்த, ஈரோஸ் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான கி.பி.அரவிந்தனின் நினைவை முன்னிட்டு, 2015இல், கட்டுரை ஒன்றை எழுதியிருந்தேன். அதில் பதிவு செய்திருந்த சில வரிகளை தேவை கருதி இங்கு மீண்டும் பதிவு செய்கின்றேன் - அதாவது, ஒரு போராட்டத்தை ஆரம்பித்தவர்களே அதனை நிறுத்தினால் அது நன்மையில் முடிவுறும் ஆனால் ஒருவர் ஆரம்பித்த போராட்டத்தை, இன்னொருவர் (ஒரு தரப்பு) முடித்து வைக்க முற்பட்டால் - அது பேரழிவில்தான் முடிவுறும். பிரபாகரனின் போராட்டத்தை முடித்து வைக்க வேண்டிய பொறுப்பும் அவரிடம் மட்டுமே இருந்தது ஆனால் அவர் அந்தப் பொறுப்பைச் செய்யாத நிலையில்,அவருடைய போராட்டம் எதிரிகளால் முடித்துவைக்கப்பட்டது.

ஒரு அரசியல் மாணவன் என்னும் வகையில், அடுத்தவர்கள் மீது பழிபோடுவதையும்,அடுத்தவர்களை குறை கூறுவதையும் நான் எப்போதுமே ஆதரிப்பதில்லை - ஏனெனில் அடுத்தவர்கள் என்பது, எப்போதுமே அடுத்தவர்கள் தான். அவர்களின் நலன்களின் வழியாகத்தான், அனைத்தையும் அவர்கள் நிறுத்துப் பார்ப்பார்கள் - அதிகார அரசியலின் விதியின் அடிப்படையில் நோக்கினால், அதில் எந்தத் தவறும் இல்லை - ஏனெனில் எங்களுக்கு எங்களுடைய நலன்கள் முக்கியமானது என்றால், மற்றவர்களுக்கு அவர்களுடைய நலன்கள் தானே முக்கியமானதாக இருக்கும் - அதனை எவ்வாறு தவறு என்று வாதிட முடியும்? எனவே இதில் எவர் மீதும் விரல் நீட்டுவதில் பயனில்லை. நாம்தான் நமக்காக சிந்திக்க வேண்டும் - செயற்பட வேண்டும்.

பிரபாகரன் இருக்கும் வரையில் ஈழத் தமிழர்களுக்கான சொந்த பலம் என்பதிலேயே அவர் உறுதியாக இருந்தார். இராணுவ பலமே, தமிழ் மக்களின் பலம் என்று எண்ணினார். அதிகார அரசியலின் விதியின் அடிப்படையிலும், உலக அரசியல் வரலாற்றின் அடிப்படையிலும் நோக்கினால், பிரபாகரனின் சிந்தனையை தவறு என்று வாதிட முடியாது. ஏனெனில், இராஜதந்திரம் பற்றி ஒரு பிரபலமான கூற்றுண்டு - இதுஜேர்மன் (பிரஷ்ய அரசன்) மகா பிரடெரிக் (1712-1786) கூறியது - அதாவது,ஆயுதங்கள் இல்லாத ராஜதந்திரம் என்பது இசைக் கருவிகள் இல்லாது இசையமைப்பதற்குஒப்பானது. இதே போன்று, பிரித்தானிய அதிபர், வின்சன் சர்ச்சில், “அதிகாரம் இல்லாத ராஜதந்திரம் என்பது உரை இல்லாமல் பிரசங்கம் செய்வது போன்றது” என்றார். இவைகள் உணர்த்துவது, அரசியல் என்பது வெறும் பேச்சுக்களோ, புலமையோ, தத்துவமோ அல்ல மாறாக அதிகாரம். அதிகாரம் இல்லாவிட்டால் என்னதான் அறிவாற்றல் இருந்தும் பயனில்லை. ஆயுத பலத்தின் வழியாகத்தான் ஒஸ்லோவில் விடுதலைப் புலிகள் அமைப்பால் நிமிர்ந்து பேச முடிந்தது. ஆயுதங்களை கைவிடுதல் என்பது நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டது ஏனெனில், ஆயுதங்கள் எங்களுடைய மக்களின் அதிகாரமாகும் என்று அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டது இந்த அடிப்படையில்தான்.

இந்தப் பின்னணியில் பிரபாகரனின் காலத்தை வாசித்தால், பிரபாகரன் ஒரு பலத்தின் அடிப்படையில் அனைத்தையும் அளவிட்டது, சிந்தித்தது, செயற்பட்டது சரியானது.இந்தப் பின்புலத்தில் பிரபாகரனை ஒரு ஸ்டாலினிஸ்ட் எனலாம். லெனின் மரணத்தைத் தொடர்ந்து அவரது இடத்தை நிரப்ப வேண்டியவர் ஆளுமைமிக்க, அறிவுஜீவியான லியோன் ரொட்ஸ்கி - ஆனால் அது நிகழவில்லை - ஏனென்றால், ரொட்ஸ்கியோ கருத்துக்களே வரலாற்றை நகர்த்துவதாக நம்பினார் - அதனால் ஸ்டாலினை கண்டுகொள்ளவில்லை ஆனால் ஸ்டாலினோ அதிகாரமே வரலாற்றை நகர்த்துவதாக நம்பினார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரும் அப்படித்தான் நம்பினார் - அதிகாரம் முழுவதையும் தனது பிடிக்குள் வைத்திருப்பதன் மூலமே ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றை நகர்த்த முடியும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். அதன் அடிப்படையிலேயே அனைத்தையும் திட்டமிட்டார். அதிகாரத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு சென்ரிமென் உதவாது. பாவ புண்ணியக் கதைகள் உதவாது. ரொட்ஸ்க்கியை நன்கு திட்டமிட்டு சோவியத் அதிகார மையத்திலிருந்து வெளியேற்றிய பின்னரும் கூட, ரொட்ஸ்கியை உயிரோடு விட்டுவைக்க ஸ்டாலின் விரும்பவில்லை. மெக்சிக்கோவில் தஞ்சமடைந்திருந்த ரொட்ஸ்கி, ஸ்டாலினிய உளவாளியால் கொல்லப்பட்டார்.



அதிகார சக்திகளினால் தீர்மானிக்கப்படும் உலகிற்கு முன்னால், ஒரு சிறிய ஆயுத அமைப்பின், ஆயுத பலத்தின் எல்லை மிகவும் மட்டுப்பட்டது என்பதை புரிந்துகொள்ள முடியாமையில்தான் அனைத்து சிக்கல்களும் ஆரம்பித்தன. இருக்கும் பலத்தை எக்காலத்திற்குமான அரசியல் பலமாக மாற்றிக் கொள்ளும் உபாயம் அறியாமல் இருந்ததே பெரும் தவறு.

ஆனால் அதிகார சக்திகளினால் தீர்மானிக்கப்படும் உலகிற்கு முன்னால், ஒரு சிறிய ஆயுத அமைப்பின், ஆயுத பலத்தின் எல்லை மிகவும் மட்டுப்பட்டது என்பதை புரிந்து கொள்ள முடியாமையில்தான் அனைத்து சிக்கல்களும் ஆரம்பித்தன. இருக்கும் பலத்தை எக்காலத்திற்குமான அரசியல் பலமாக மாற்றிக் கொள்ளும் உபாயம் அறியாமல் இருந்ததே பெரும் தவறு. பிரபாகரன் அதனை புரிந்து கொள்ளாமல் இருந்தார் என்று நம்புவது கடினம் ஏனெனில் இராணுவ நுணுக்கங்களை அறிந்திருந்த ஒருவர், எவருடைய ஆதரவும் இன்றி, தனது நம்பிக்கையையும், தன்னை நம்பியவர்களை மட்டுமே மூலதனமாகக் கொண்டு, ஒரு வலுவான இராணுவக் கட்டமைப்பை உருவாக்குவதில் வெற்றிபெற்றவர், அவ்வளவு எளிதாக விடயங்களை கண்டுகொள்ள முடியாதவராக இருந்திருக்க முடியாது ஆனாலும் அனைத்துமே நடந்து முடிந்தது. ஒரு வேளை அவர் தனது நம்பிக்கையாலும், தனது அனுபவங்களாலும் கட்டுண்டு, திருப்பிப் பார்க்க முடியாதவாறு தன்னைத் தானே சிறைப்படுத்தி வைத்திருந்திருக்கலாம் - அவர் என்ன எண்ணினார் என்பதைப் பற்றி ஊகங்களை மட்டுமே நம்மால் செய்ய முடியும். ஆனால் அவர் கட்டியெழுப்பிய சாம்ராஜ்யத்திற்கான இறுதி அத்தியாயத்தையும் அவரே எழுதினார் என்பதே வரலாறு.

இது பிரபாகரன் இல்லாத காலம். மிகவும் சிரமப்பட்டு, பல்வேறு சவால்களுக்கு மத்தியில் அவர்மீது மரியாதை கொண்டவர்கள், அவருக்கான இறுதி அஞ்சலியை கடந்த ஆண்டு செய்திருந்தனர். அது எப்போதோ செய்யப்பட்டிருக்க வேண்டும் - அப்படி நடந்திருந்தால் பலரது சுயநல அரசியல் தேவைகளுக்கான கருவியாக, அவரது பெயர் பயன்படுத்தப்படுவதை தடுத்திருக்கலாம்.

ஒருவர், அவருடைய காலத்தில் ஆற்றிய செயல்களின் பெறுமதி, அவர் இல்லாத காலத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதைக் கொண்டே மதிப்பிடப்படும். இந்த அடிப்படையில் நோக்கினால், பிரபாகரன் இல்லாத கடந்த பதினேழு ஆண்டுகளில் அவரது நாமம் பயன்படுத்தப்பட்ட முறையும், அவரது பெயரால் இடம்பெற்ற விடயங்களும் எந்த வகையிலும் அவரை மரியாதைக் குரியவராக பாதுகாக்கவில்லை - மாறாக, அவரை அவமதிப்பதாகவே அமைந்திருந்தது. அவர் சிலரது வியாபார நலன்களுக்கான கருவியாக்கப்பட்டிருக்கின்றார். இது ஏன் நடந்தது? இப்போதும் ஏன் நடக்கின்றது? - என்பதற்கான பதில் இந்தக் கட்டுரையாளரிடம் இல்லை - இலகுவான பதில் ஒன்றுண்டு - இவை அனைத்துக்கும் பின்னாலும் உளவுத்துறைகளின் கரங்கள் உண்டு - அப்படியென்றால் தமிழ் நாட்டில் சீமானையும் ஏதோவொரு உளவுத்துறைதான் வழிநடத்துகின்றது என்னும் முடிவுக்கே நாம் வர நேரிடும். அவ்வாறான சதிக்கோட்பாட்டு வாதங்களில் சுகம் காண்பது எனது நோக்கம் அல்ல, மேலும் சதிக்கோட்பாடுகளை முன்னிறுத்தும் அரசியலை நான் ஆதரிப்பதும் இல்லை. ஏனெனில் அது ஆதரிப்பவரையும் ஒரு நாள் தாக்கும். துரோகி என்பது எவ்வாறு ஒரு பூமறாங்காக இன்று அனைவரையும் தாக்குகின்றதோ அப்படி.


இன்றைய அரசியல் இயலாமை யும், ஈழத் தமிழர்களின் இன்றைய தலைவர்கள் என்போர்களின் நிலையையும் உற்றுநோக்கினால்,ஈழத் தமிழர் அரசியல் அடிப்படையிலேயே அதன் உயிரோட்டத்தை இழந்துவிட்டது. சாறு இல்லாத கரும்பின் சக்கை போன்றதே இன்றைய ஈழத் தமிழர் அரசியல். 2009இற்கு பின்னரான

காலத்தை கையாள முடியாமையும், எவ்வாறு கையாளுவது என்பதில் ஒரு புள்ளியில் சந்திக்க முடியாமையுமே அனைத்துக்குமான காரணம். மாபெரும் தியாகங்களை செய்த ஒரு மக்கள் கூட்டம், எதிரியையே வியக்கவைத்த தாக்குதல்களை புரிந்த ஒரு மக்கள் ஒரு கூட்டம், இன்றோ,ஈழத் தமிழர் அரசியல் என்றால், அது கோமாளித்தனம் என்று கூறக்கூடிய நிலைக்கு வந்து சேர்ந்திருக்கின்றது. மக்களின் பிரதிநிதிகளின் தகுதியைக் கொண்டே, ஒரு மக்கள் கூட்டத்தின் அரசியல் விழிப்புணர்வை அளவிட முடியும். அப்படிப் பார்த்தால், ஈழத் தமிழர்களின் அரசியல் விழிப்புணர்வின் அளவு என்ன என்பதை விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை.

கடந்த பதினேழு ஆண்டுகால அரசியல் நகர்வுகளையும் அதன் பூச்சிய விளைவையும் உற்றுநோக்கினால், ஒன்று வெள்ளிடைமலை - அதாவது, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் தோற்றுப் போனார் என்பது எந்தளவு உண்மையோ, அதேயளவிற்கு, பிரபாகரன் இருக்கின்ற போது, அவரை ஏற்காதவர்களும், அவரைத் தூற்றியவர்களும் தோற்றுத்தான் போயிருக்கின்றனர். ஏனெனில் அவர் இல்லாத பதினேழு ஆண்டுகளில் எந்தவொரு புதிய அரசியல் போக்கையும் தமிழ்ச் சூழலில் எவராலும் ஏற்படுத்த முடியவில்லை. பிரபாகரன் தவறு, நீங்கள் சரியானவர்கள் என்றால், ஒரு புதிய அரசியல் அத்தியாயம் எழுதப்பட்டிருக்க வேண்டுமல்லவா - அது நிகழவில்லை என்றால் உங்களால் முடியவில்லை என்பதுதானே பொருள். அதே போன்றுதான் பிரபாகரனை இப்போதும் நேசிப்பதாகக் கூறிக்கொண்டு, அவரை தங்களுடைய அரசியலுக்கான முதலீடாக்கிக் கொண்டிருப்பவர்கள், ஒன்றில் அவரது பாதையில் பயணித்திருக்க வேண்டும் அல்லது ஆகக் குறைந்தது ஜனநாயக அரசியலையாவது ஒரு குறைந்தளவான அரசியல் பலமாக்கிக் கொள்ளும் முயற்சியில் வெற்றிபெற்றிருக்க வேண்டும். ஆனால் எதுவும் நிகழவில்லை. அந்த வகையில் நோக்கினால், பிரபாகரனின் இறப்பின் பின்னரான காலம் என்பது, நாங்கள் தோற்றுப் போனவர்கள் என்பதை மேலும் உறுதிப்படுத்திய காலமாகவே நீண்டு சென்றிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எம் கதையாகும் "என் கதை"



- மாலி

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நூல் வெளியீடு இடம்பெறுவதை முன்னிட்டு இந்த கட்டுரை பிரசுரமாகிறது.




இலங்கையில் தமிழ்ச் செய்திப் பத்திரிகைத்துறை அதன் நூற்றாண்டை எய்துகின்ற காலகட்டம் இது. இவ்வேளையில், பத்திரிகைத்துறையில் "என் கதை" என்று ஒரு நூல் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இன்று வெளியாகின்றது.

பத்திரிகைத்துறையின் இந்த நூற்றாண்டில், அதன் அரைவாசிக்கால அனுபவக் கதை இந்த பத்திரிகையாளனின் கதை. இதில் ஒரு வியத்தகு உன்னதமும் மகிழ்வும் இந்த கதையின் வாசிப்பில் மனதில் அனுபவமாகிறது. "என் கதை" என்ற இந்த பத்திரிகையாளனின் கதை உண்மையில் "எம் கதை".

கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் இலங்கையில் தமிழர்களின் அரசியல், சமூக வெளிப்பாட்டுக் கோலம் அசலாய் ஒரு கண்ணாடியில் தெரிகிறது. ஒரு பத்திரிகையாளன் காண்பிக்கும் பிரதிமை இதுவாகையில், மனதில் அந்த உன்னத மகிழ்வு ஏற்படுகிறது.

**அசல் பத்திரிகையாளன் என்பவன் வேறு யார்?**

நண்பர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதியுள்ள நூல் இது. இலங்கையில் பத்திரிகைத்துறை சார்ந்து எல்லாத் தரப்பிலுமே ஒரு கண்ணியத்தோடு அறியப்படுபவர் தனபாலசிங்கம்.

இலங்கையின் செய்திப் பத்திரிகைத் துறை பொதுவில் "வீரகேசரி" யின் தொடக்கத்தில் இருந்து கணிக்கப்படுகையில், வீரகேசரியில்தான் நண்பர் தனபாலசிங்கத்தின் பத்திரிகை வாழ்வும் தொடங்கியது. 1977 ஆம் ஆண்டில் தனது 21ஆவது வயதில் தனபாலசிங்கம் வீரகேசரியில் இணைந்தார். பின்னர் அவர் கொழும்பில் மற்றொரு புதிய தினசரியான "தினக்குரல்" பத்திரிகை 1997ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டபோது அதன் சிருஷ்டிகர்த்தாக்களில் ஒருவரானார்.

வீரகேசரியில் அவர் இணைந்த சில நாட்களில் 1977 இனக்கலவரம் வெடித்தது. தினக்குரலில் பணியாற்றி, 2021 ஆம் ஆண்டில் பத்திரிகை நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் பத்திரிகையாளன் என்ற நிலையில் இருந்து அவர் ஓய்வு பெற்றார். இந்த காலப்பகுதி இனங்களுக்கு இடையிலான மோதலில் இலங்கையில் ஒரு ஆயுதப் போராட்ட வரலாற்றுக் காலத்தையும் உள்ளடக்கியதுடன் தனிமனித உயிர்வாழ்வு சவாலுக்குள்ளாகிய காலமுமாகும். தென்னிலங்கையும் தீவிரவாதக் கிளர்ச்சியை எதிர்கொண்டிருந்தது.

பத்திரிகைத்துறையில் ஒப்புநோக்குனராக முதற்படியில் கால்வைத்து தனபாலசிங்கம் உதவி ஆசிரியர், பாராளுமன்ற செய்தியாளர், செய்தி ஆசிரியர், பிரதம ஆசிரியர் என்று ஒவ்வொரு படிகளிலுமாய் இக் காலத்தைக் கடந்து வந்தவர்.

தனபாலசிங்கத்தின் இளமைக் காலத்து இடதுசாரிக் கொள்கைப் பிடிப்பும் ஆங்கில மொழியறிவும் பாராளுமன்ற அனுபவமும் பத்திரிகைத்துறையில் ஒவ்வொரு கட்டத்திலும் அவரை மேன்மையாக்கியிருக்கின்றன. சர்வதேச அரசியலிலும் உள்நாட்டு அரசியலிலும் விசாலமான பார்வையுடனான தனது எழுத்துக்களிலும் அரசியல் பிரச்சினைகளுடனான தேசிய இனமொன்றைச் சார்ந்த பத்திரிகையொன்றின் "தர்மம் சார்ந்த நடுநிலை" பேணிய தனது ஆசிரிய தலையங்கங்களிலும் தனபாலசிங்கம் கருத்துரைகளின் சுதந்திரத்தில் உண்மையின் புனிதத்தைத் தரிசித்திருக்கிறார். அது அவர் சொல்லும் கதையில் துலாம்பரமாகத் தெரிகிறது.

இவரின் கதை மீட்டி உணர்த்தும் யதார்த்தத்தின் உணர்வுகள் ஒவ்வொருவரின் சிந்தனையையும் உறுத்தவைக்கின்றன. சிறப்பாக, இரு சாராருக்கு இந்த நூல் பொதுவான வாசிப்புக்கு அப்பால் பயனுடையது.

அரசியல் தலைமை ஒன்று இல்லாமல் சிதைக்கப்பட்டுவிட்ட நம்முடைய இனத்துக்கு இன்னமும் அரசியல் செய்து கொண்டிருப்பவர்கள் தங்களை இந்த கதையில் உணர்ந்து கொள்ள முடியும். அந்த உணர்வில், விரும்பினால் அவர்கள் மக்களுக்கான அரசியல்வாதிகளாக முடியும்.

பத்திரிகைத்துறை சார்ந்தோர் மற்றையவர்கள். நூற்றாண்டை எய்துகிற வேளையில் நமது பத்திரிகைத்துறையும் நிச்சயமாக அதன் நூற்றாண்டுகால பரிமாண வளர்ச்சியிலன்றி, முதிர்ந்தே கிளை விடுகின்றது. "பத்திரகைத்துறையில் என்கதை" இதனை நிச்சயம் இந்த துறைசார்ந்து ஈடுபாடு கொண்டவர்ளுக்கு உணர்த்தும். இந்த துறையில் நாட்டம் கொண்டவர்களுக்கு நிச்சயம் இது ஒரு தெளிவூட்டும்.

சிரேஷ்ட பத்திரிகையாளர்கள் டி.பி.எஸ். ஜெயராஜ், சந்திரிகா சுப்பிரமணியன், லெ.முருகபூபதி மற்றும் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான், தெ.மதுசூதனன் ஆகியோர் நூலுக்கு அளித்திருக்கும் மதிப்புரைகள் இதனை நன்றே செப்புகின்றன.

2021 ஆம் ஆண்டில் வீரகேசரியுடன் தினக்குரல் இணைக்கப்பட்டபோது தனபாலசிங்கம் மீண்டும் வீரகேசரியில் ஆலோசகராக இருந்தார். 2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட "சமகாலம்" சஞ்சிகையின் ஆசிரியராகவும் அவர் பணியாற்றினார். ஆங்கிலப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியாகும் விதத்தில் தமிழிலும் காத்திரமான விவரணக் கட்டுரைகளை வெளிக்கொணர இயலும் என்பதை உணர்த்தி இலங்கையில் இருந்து வெளியான சஞ்சிகையே "சமகாலம்."

லண்டனில் இருந்து "நாழிகை" சஞ்சிகையை வெளியிட்ட அனுபவத்தில் எனக்கு இது பெருமகிழ்வானது. அத்தோடு நண்பர் தனபாலசிங்கத்தின் "கதை" என்போன்ற பத்திரிகையாளர்கள் சிலரையும் அழைத்து வருடிச்செல்கிறது. தனபாலசிங்கம் தனது உன்னதத்தில் இன்னமும் நடக்கிறார்.

## நன்னீர் இறால் வளர்ப்பு மேம்பாட்டுக்கு அரசு 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு!

கொழும்பு, மே. 17

நாட்டின் நன்னீர் இறால் வளர்ப்புத்துறையை நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக அதிக அறுவடை தரும் ஒரு வணிகத்துறையாக மாற்றியமைக்கும் நோக்கில், ஜனாதிபதியால் 2025 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 25 மில்லியன் ரூபா நிதியின் கீழ் விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கித்சிறி தர்மப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதுவரை பின்பற்றப்பட்ட பாரம்பரிய முறைக்கு மாற்றாக, இறால் குஞ்சுகளை நேரடியாக நீர்நிலைகளில் விடுவிக்காமல், அவற்றை நீர்த்தேக்கங்களுக்குள்ளேயே அமைக்கப்பட்டுள்ள கூடுகளில் ஒரு மாதம் வரை வளர்த்து அதன் பின்னரே நீர்நிலைகளுக்குள் விடுவிப்பது இப்புதிய தொழில்நுட்பத்தின் சிறப்பம்சமாகும்.

இதற்கமைய, நன்னீர் இறால் வளர்க்கப்படும் பிரதான நீர்த்தேக்கங்களை மையப்படுத்தி, ஆராய்ச்சி மட்டத்திலான 25 கூடுகளை நிறுவுவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்புதிய தொழில்நுட்பத் தலையீட்டின் மூலம் நன்னீர் மீனவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், நுகர்வோருக்கு அதிகளவிலான நன்னீர் இறால் உற்பத்திகளை வழங்கவும் முடியும் என தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

(அ)

## தண்டவாளங்கள் புனரமைக்கப்படாததே ரயில் விபத்துக்களுக்கு முழுக் காரணம்!

கொழும்பு, மே. 17

ரயில் தண்டவாளங்கள் முறையாக புனரமைக்கப்படவில்லை. இதனால் தான் ரயில்கள் அடிக்கடி தடம் புரள்கின்றன. புகையிரத பாதைகளை சீராக புனரமைப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என லொகோமோடிவ் ரயில் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் சி.எம். சேனாநாயக்க தெரிவித்தார்.

மருதானை ரயில் நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

வனவாசல ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று அதிகாலை தடம்புரண்டு விபத்துக்குள்ளான சம்பவத்துக்கும், ரயில் சாரதிக்கும் இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது.

சாஹரிகா ரயில் கடந்த மாதம் வாதுவை ரயில் நிலையத்தை அண்மித்த பகுதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. ரயில் அதிக வேகத்தில் சென்றதால் தான் விபத்து இடம்பெற்றது என்று குறிப்பிட்டு ரயில் சாரதி உட்பட நால்வர் சேவையில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டார்கள்.

நேற்று காலை வனவாசல ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டு, பயணத்தை ஆரம்பித்த வேளையில் தான் ரயில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இந்த ரயில் மணிக்கு 20 கிலோமீற்றர் வேகத்தில் தான் பயணித்துள்ளது. ஆகவே ரயில் வேகமாக பயணித்த காரணத்தால் தான் இந்த விபத்து இடம்பெற்றது என்று குறிப்பிட முடியாது.

ரயில் தண்டவாளங்கள் முறையாக புனரமைக்கப்படவில்லை. இதனால் தான் ரயில்கள் அடிக்கடி தடம்புரள்கின்றன. ரயில் பாதைகளை சீராக புனரமைப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்- என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பதினேழாவது மே 18:



நிலாந்தன்

# 17 ஆண்டுகால நீதிக்கான போராட்டம்?

17 ஆண்டுகளாகி விட்டன. 2009க்கு முன்தமிழ் மக்களின் போராட்டம் தனிநாட்டுக்கான போராட்டமாகப் பார்க்கப்பட்டது. ஆனால் 2009க்குப் பின் தமிழ் மக்கள் அதனை நீதிக்கான போராட்டம் என்று அழைத்துக் கொள்கிறார்கள். இன அழிப்புக்கு எதிரான நீதியைப் பெறுவதற்கான போராட்டம் என்ற பொருளில். கடந்த 17ஆண்டுகளாக நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் எதுவரை முன்னேறியிருக்கிறார்கள்?

ஈழத் தமிழர்கள் என்று கூறும்போது இப்பொழுது இரண்டு தமிழ்ப் பரப்புகளை கவனத்தில் கொள்ளவேண்டும். ஒன்று, தாயகம். மற்றது, புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம்.

முதலில் தாயகத்தை எடுத்துக் கொள்வோம். தாயகத்தில் கடந்த 17 ஆண்டுகளாக தமிழ்மக்கள் எதுவரை முன்னேறியிருக்கிறார்கள்? நீதிக்கான போராட்டம் என்பது நிச்சயமாககட்சி அரசியல் அல்ல. இலங்கைத் தீவின் சட்டச் சூழலுக்குக்குள் தாயகத்தில் அதை முன்னெடுப்பதில் அடிப்படையான நெருக்கடிகள் இருக்கும். எனவே சட்டரீதியாகப் போராடமுடியாது. சட்டமறுப்பாகத்தான் போராட வேண்டும். அவ்வாறு போராட்டத்தக்க ஏற்பாடுகள் எவையாவது தமிழ்மக்கள் மத்தியில் உண்டா? அவ்வாறு எத்தனை போராட்டங்கள் இது வரையிலும் நடந்திருக்கின்றன?


சில "எழுகதமிழ்கள்", ஒரு "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை" யானபேரணி, தமிழ்ப் பொதுவேட்பாளர், தையிட்டிப் போராட்டம், நிலப் பறிப்புக்கு எதிரான ஏனைய போராட்டங்கள் போன்றவற்றிற்கும் அப்பால் தமிழ் அரசியலானது கட்சிமைய அரசியலாகப் பெட்டிகட்டப்பட்டுவிட்டது.

அந்தக் கட்சிமைய அரசியலும்கூட தமிழ் மக்களை, கட்சிகளாக, கட்சிக்குள் குழுக்களாக, வடக்குக்-கிழக்காக, முகநூல் குழுக்களாக, இன்னபிறவாகப் பிரித்து வைத்திருக்கிறது. 2009இல் தமிழ்மக்கள் மத்தியில் பலமான ஒ ருகட்டமைப்பாக கூட்டமைப்பு இருந்தது. அதுபடிப்படியாக உடைந்து இப்பொழுது தமிழரசுக் கட்சி உள்ளவற்றில் பெரியகட்சியாகக் காணப்படுகிறது. அங்கேயும் இரண்டு அணிகள். கண்டி வீதியில், மாங்குளத்தில் ஒரு மேதினம், கிளிநொச்சியில் ஒரு மே தினம்.

கடந்த 17 ஆண்டுகால தேக்கத்துக்கும் தோல்விகளுக்கும் பின்னடைவுகளுக்கும் தமிழரசுக் கட்சிதான் பொறுப்பேற்க வேண்டும். ஏனென்றால் அதுதான் தன்னையே முதன்மைக் கட்சி, பிரதான கட்சி என்று கூறிக்கொள்கிறது. தமிழரசுக் கட்சிக்கு மாற்றாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எழுச்சி பெறவில்லை. ஆனால், கொள்கை ரீதியாக மாற்றாகக் காணப்படுகிறது. கடந்த 17 ஆண்டுகளில் தங்களை ஒரு பலமான மாற்று அணியாகக் கட்டி எழுப்ப அவர்களால் முடியவில்லை.

எனவே தாயகத்தில் தமிழ்த் தேசிய அரசியல் நிலவரத்தைகடந்த 17 ஆண்டு கால பரப்புக்குள் தொகுத்துப் பார்த்தால், தெளிவாகத் தெரிவது என்னவென்றால் தமிழ் மக்கள் தோற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் ஒரேயளவு ஆசனங்கள் கிடைத்தன என்பதை இங்கே சுட்டிக்காட்டவேண்டும்.

கட்சிமைய அரசியலுக்கூடாக நீதிக்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியாது மட்டுமல்ல, இனப் பிரச்சினைக்கான தீர்வையும் பெறமுடியாது என்பதைத்தான் கடந்த 17 ஆண்டுகால அரசியல் நிரூபித்திருக்கிறது. கடந்த 17 ஆண்டுகளிலும் 2015ல் இடம்பெற்ற ஆட்சிமாற்றத்தின்போது தமிழ் மக்களின் பேரம் ஒப்பீட்டளவில் உயர்வாக இருந்தது. ஆனால் இப்பொழுது அப்படியல்ல. தமிழ் மக்களின் பேரம் குறைந்து வருவதைத்தான் ஐநாவின் நடவடிக்கைகளும் உணர்த்துகின்றன. என்பிபி அரசாங்கம் பொறுப்பேற்ற பின், அந்த அரசாங்கத்திற்கு ஒரு வாய்ப்பை வழங்கவேண்டும் என்று ஐநா சிந்திப்பது தெரிகிறது.




"ஒவ்வொரு மே மாதம் 18ஆம் திகதியும் தமிழ்மக்கள் கட்சி கடந்து, தேச எல்லைகளைக் கடந்து, ஒரே உணர்ச்சிப் புள்ளியில் ஒன்று திரள்கிறார்கள். ஆனால் அந்தத் திரட்சியும் உணர்ச்சி வேகமும் அரசியல் ஆக்கசக்தியாக மாற்றப்படவில்லை. அவ்வாறு மாற்றத்தக்க அரசியல் தரிசனங்களோடு தமிழ் மக்கள் மத்தியில் மக்கள் அமைப்புகளும் இல்லை, கட்சிகளும் இல்லை."

கடந்த 17 ஆண்டுகால ஐநாமைய அரசியலில் என்ன கிடைத்தது? 2021ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் அலுவலகந்தான். அது கூட மனித உரிமைகள் பேரவையின் அலுவலகத்துக்குள் தான் இயங்குகிறது. முனித உரிமைகள் பேரவைக்குள்ள வரையறுக்கப்பட்ட ஆணைதான் அதற்கும் உண்டு.

அந்த அலுவலகத்தின்மூலம் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சிகளும் அடுத்தகட்டமாக எந்த அனைத்துலக நீதிமன்றத்தில் உரியசட்ட ஆவணங்களாக மாற்றப்பட்டு முன்நகர்த்தப்படும் என்பது தொடர்பில் யாரிடமும் தெளிவான தரிசனங்கள் இல்லை. இதுதொடர்பாக கஜேந்திரக்குமார் ஏற்கனவே கேள்வி எழுப்பியிருக்கிறார். இந்த அலுவலகத்தால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சிறிலங்காவின் படைப் பிரதானிகள் சிலருக்கு எதிராக, சில வெளிநாடுகள் பயணத் தடை நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஐநாவில் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சிகளும் ஈழத் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலானவையா? அல்லது சீன விரிவாக்கத்தின் ஒருபகுதியாக மாறக்கூடிய அதிகளவு வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் இச்சிறியதீவின் அரசாங்கங்களின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நோக்கிலானவயா? என்ற கேள்விக்கு விடை முக்கியம். ஐநாமைய அரசியலில் கடந்த 17 ஆண்டுகளிலும் கிடைத்தது இது.

இது தாயகநிலவரம்.புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பை இனிபார்க்கலாம். நீதிக்கான போராட்டத்திலும் ஐநா மைய அரசியலிலும் ஒப்பீட்டளவில் வினைத்திறனோடு, சுயாதீனமாக நகர்வுகளை முன்னெடுப்பது பெருமளவுக்கு புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தான். 2009க்குப் பின்னரான நீதிக்கான போராட்டத்தின் கூர்முனைபோல அவர்களே தோன்றுகிறார்கள். அவர்களுடைய உழைப்பின் விளைவாகவே குறிப்பாக கனடாவில் இன அழிப்புக்கு எதிரானபோராட்டத்தில் தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டக்கூடிய சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதுபோலவே பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும் இன அழிப்பை முன்னெடுத்தவர்களுக்கு எதிராக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

தாயகத்தைப் போலவே புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் உடைவுகள் அதிகம். இறந்தவர்களை உயிர்பிக்கும் அரசியல் ஒருபுறம். பொதுச் சொத்தை தனிச் சொத்தாகத் திருடும் போக்கு ஒருபுறம். தங்களுடைய விடுதலையை வேறு யாராவது பெற்றுத் தருவார்கள் என்று நம்பி அவர்களை நோக்கிக் காசை விசுக்கும் போக்கு ஒருபுறம், தாயகத்தில் உள்ள போராட்ட அமைப்புகளை நிதி உதவிகளின் மூலம் கையாளும் போக்கு ஒருபுறம். என்றிவ்வாறாக புலம்பெயர்ந்தத மிழ்ச் சமூகம் ஏதோ ஒரு விதத்தில் தாயக அரசியலின் மீது அதிகரித்த ஈடுபாட்டைக் காட்டிவருகிறது. குடைசியாக நடந்தத மிழ்நாட்டின் சட்டசபைக்கான தேர்தலிலும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தீவிரமாகத் தலையிட்டது. அதிகளவு நிதி முதலீடுகளைச் செய்தது. தமிழ்நாட்டின் தேர்தல் களத்தில் ஈழத் தமிழர்கள் அதிகளவு ஈடுபட்ட ஒரு தேர்தலாக கடந்த மாதம் நடந்த தேர்தலைக் குறிப்பிடலாம். இது வெளியாருக்காக காத்திருக்கும் அரசியலின் ஒருபகுதிதான்.

எனவே இப்பொழுது இரண்டு தமிழ்ப் பரப்புக்களையும் தொகுத்துப் பார்ப்போம். கடந்த 17ஆண்டு காலப் பகுதியிலும், தாயகத்தில், தமிழ்த் தேசிய அரசியல் மெலிந்துகொண்டே போகிறது. சனத் தொகையும் மெலிந்துகொண்டே போகிறது. கட்சி அரசியலில் ஏற்பட்ட விரக்தியின் விளைவாக தமிழ் மக்கள் என்பிபிக்கும் அர்ஜூனாவுக்கும் வாக்களித்திருக்கிறார்கள். அதில் ஒரு பகுதியினர் கடந்த மாதம் நடந்த தமிழ்நாட்டின் தேர்தலில் அளவுக்கு மிஞ்சி ஈடுபாடுகாட்டினார்கள்.

நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் பொருத்தமான விதங்களில் திருப்தியான விதங்களில் முன்நகரவில்லை. கட்சிமைய அரசியலிலும் தேசமாகத் திரளக்கூடிய நிலைமைகள் இல்லை. மாறாக தேசம் திரைந்துகொண்டே போகிறது. "வேர்ச்சுவல்"- மெய்நிகர் அரசியல் பரப்பில் தமிழ்த் தலைவர்கள் கதாநாயகர்களாக இல்லை. அனுரதான் ரீல்ஸ்களை ஆக்கிரமிக்கிறார். இப்பொழுது விஜய்.

இதுதான் கடந்த 17ஆண்டுகளிலும் தமிழ்மக்கள் பெற்றவை, பெறாதவை. ஒவ்வொரு மேமாதம் 18ஆம் திகதியும் தமிழ்மக்கள் கட்சிகடந்து, தேச எல்லைகளைக் கடந்து, ஒரே உணர்ச்சிப் புள்ளியில் ஒன்றுதிரள்கிறார்கள். ஆனால் அந்தத் திரட்சியும் உணர்ச்சிவேகமும் அரசியல் ஆக்கசக்தியாக மாற்றப்படவில்லை. அவ்வாறு மாற்றத்தக்க அரசியல் தரிசனங்களோடு தமிழ் மக்கள் மத்தியில் மக்கள் அமைப்புகளும் இல்லை, கட்சிகளும் இல்லை. கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்கசக்தியாக மாற்றினால்தான் நீதிக்கான போராட்டத்தை செலுத்தும் விசையாக அதுமாறும். மே 18 எனப்படுவது ஒவ்வொரு ஆண்டும் கூடி அழுது பின் கலைந்துபோகும் ஒருசடங்கு அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "தோல்வி நிலையென நினைத்தால்" தமிழீழ இயக்கங்களின் "குரலாக" இந்த திரைப்பட பாடல் மாறியது எப்படி?



**- சிராஜ்**

அது 1980களின் பிற்பகுதி, ஒரு பாடல் இலங்கை வடக்கு, கிழக்கின் பெரும்பாலான கிராமங்களில் தொடர்ந்து ஒலிக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் என்பது தமிழர்கள் அதிகம் வாழும் பகுதி. அங்கிருக்கும் கோவில்களின் ஒலிப்பெருக்கிகளை கொண்டுவந்து, கார்களில் கட்டி, அந்தப் பாடல் கிராமங்களின் வீதிகளை அடைகிறது.

"இலங்கையில் அப்போது இருந்த பல்வேறு ஈழ போராட்ட இயக்கங்கள், இந்த பாடலை தமது பாடல் போல பயன்படுத்தின" என்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் கணேசலிங்கம் சந்திரலிங்கம்.

"ஊமை விழிகள்" (1986) திரைப்படத்தின் "தோல்வி நிலையென நினைத்தால்..." என்ற அந்த பாடல் இன்று வரை கூட சமூக ஊடகங்களில் ஈழப் போராட்டங்களுடன் தொடர்புபடுத்தப்படுகிறது.

சமீபத்தில், ராஜ் பிரியன் என்ற இன்ஃப்ளுயன்சர் தனது சமூக ஊடகப் பக்கத்தில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகள் தொடர்பான ஒரு நகைச்சுவை காணொளியை பதிவேற்றி, பின்னணியில் இந்தப் பாடலை சேர்த்திருந்தார்.

அந்தப் பதிவில் பலரும், "தோல்வி நிலையென நினைத்தால்..." பாடலை நகைச்சுவையாகப் பயன்படுத்த வேண்டாம், அது "ஈழத் தமிழர்களுடன்" தொடர்புடையது என பதிவிட்டிருந்தனர்.

"திரைப்படப் பாடல்களை போராட்டங்களுடன் இணைத்துக்கொள்வது புதிதல்ல. உதாரணத்திற்கு 1939இல் வெளியான "மாத்ரு பூமி" திரைப்படத்தின் பாடல்கள் இந்திய சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டது. அப்படி சில பாடல்கள் மக்கள் மனதில் உணர்வுபூர்வமாக பதிந்து விடும்" என்கிறார் திரைப்பட வரலாற்றாசிரியர் தியடோர் பாஸ்கரன். பாடல்கள் சமூகத்தில் அவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துமா எனக் கேட்டால், "இரண்டாம் உலகப் போர் தொடங்கிய பிறகு தங்கள் அரசுக்கு எதிரான பாடல் என "மாத்ரு பூமி" பாடலை பிரிட்டிஷ் இந்தியா தடைசெய்தது, அந்த அளவுக்கு




மக்களிடையே அது சென்று சேர்ந்தது" எனவும் தியடோர் பாஸ்கரன் குறிப் பிடுகிறார்.

"தோல்வி நிலையென நினைத்தால்.." பாடலை எழுதியவர் ஆபாவாணன். "ஊமை விழிகள்" திரைப்படத்தின் திரைக்கதை மற்றும் வசனங்களை எழுதியவர், தயாரிப்பாளர் என்பதோடு, பி.பி.சிறிநிவாஸ் உடன் இணைந்து அந்தப் பாடலையும் அவர் பாடியிருப்பார்.

"ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்கள் மக்களிடம் தங்களை நிலைநிறுத்துவதற்காக அல்லது போரில் மரணித்தவர்களின் இறுதி நிகழ்வுகள் செய்கின்ற போது, இலங்கை வடக்கு - கிழக்கின் எல்லா கிராமங்களிலும் இந்த பாடல் ஒலிபரப்பப்பட்டது. ஒவ்வொரு வரியும் இங்கு பலருக்கும் மனப்பாடம்" என்கிறார் கணேசலிங்கம் சந்திரலிங்கம்.

"ஊமை விழிகள்" திரைப்படம் தமிழ்நாட்டில் பெரும் வரவேற்பைப் பெற்றது. ஆனால், இலங்கை வடக்கு - கிழக்கில் அந்தத் திரைப்படத்தைப் பற்றி பலருக்கும் தெரியாவிட்டாலும், "தோல்வி நிலையென நினைத்தால்" பாடல் மிகவும் பிரபலமடைந்தது என்கிறார் அவர்.

"அதற்கு முன்னர் எம்.ஜி.ஆரின் பாடல்களை ஈழ இயக்கங்கள் பயன்படுத்தின. ஆனால், அதை விட இந்த ஒற்றைப் பாடல் 80களின் பிற்பகுதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உதாரணத்திற்கு, இயக்கங்கள் ஏதேனும் தோல்விகளைச் சந்திக்கும்போது இந்தப் பாடல் ஒலிக்கப்படும். அதனால் பல இளைஞர்களிடம் இந்தப் பாடல் சென்று சேர்ந்தது" என்கிறார் கணேசலிங்கம் சந்திரலிங்கம்.

> **"உரிமை இழந்தோம், உடமையை இழந்தோம்... உணர்வை இழக்கலாமா.. இந்த வரிகள் ஈழ மக்களுக்கு, "எதை இழந்தாலும் தமிழ் உணர்வை, போராட்டங்களை கைவிடக் கூடாது" என்பதை உணர்த்த இயக்கங்களுக்கு உதவியது"**

"ஊமை விழிகள்" திரைப்படத்தில் இந்தப் பாடல் இடம்பெறும் சூழல் குறித்தும் நாம் பார்க்க வேண்டும்.

"தினமுரசு" என்ற பத்திரிக்கையை நடத்தி வரும் ஆசிரியர் சந்திரன் (ஜெய் சங்கர்), தனது ஊடகம் மூலம் அரசுக்கு எதிரான செய்திகளை தொடர்ந்து வெளியிடுபவர், அதனால் அவருக்கு அரசியல் சார்ந்த நெருக்கடிகள் மட்டு மல்லாது பல்வேறு பொருளாதார நெருக்கடிகளும் இருக்கும்.

தனது பத்திரிக்கை ஊழியர்களுக்கு சம்பளம் தரமுடியாத நிலையில் அவர் இருப்பார், இருந்தும் ஊழியர்கள் அங்கு தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

ஒருகட்டத்தில், பத்திரிக்கையில் வெளியாகும் ஒரு செய்தி ஆளும் தரப்பை அதிகமாகவே கோபப்படுத்தி விட, "தினமுரசு" அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டு, பல ஊழியர்கள் கடுமையாக தாக்கப்படுவார்கள். அதன் பிறகு, இனியும் இங்கு பணிபுரிய வேண்டாம் என சில ஊழியர்கள் முடிவெடுத்து, வெளியேற எத்தனிக்கும்போது, ஆசிரியர் சந்திரன் பாடுவது போல திரைப்படத்தில் இந்தப் பாடல் இடம் பெற்றிருக்கும்.

"பாடல் முதலில் மிகவும் மெதுவாகத் தொடங்கும். இனி எதுவுமே செய்ய முடியாது, தோல்வியை ஒப்புக்கொண்டு இந்தப் பத்திரிக்கை துறையிலிருந்து வெளியேறலாம் என ஊழியர்கள் நினைக்கும்போது, பாடலின் மூலம் "இந்தப் போராட்டத்தின் அவசியத்தை" ஆசிரியர் எடுத்துரைப்பார். அதை ஊழியர்களும் புரிந்துகொள்ளத் தொடங்கும் போது பாடல் வேகமெடுக்கும்" என ஒரு நேர்காணலில் கூறியிருப்பார் "ஊமை விழிகள்" திரைப்படத்தின் இயக்குநர் அரவிந்தராஜ்.

"உரிமை இழந்தோம், உடமையை இழந்தோம்... உணர்வை இழக்கலாமா.. இந்த வரிகள் ஈழ மக்களுக்கு, "எதை இழந்தாலும் தமிழ் உணர்வை, போராட்டங்களை கைவிடக் கூடாது" என்பதை உணர்த்த இயக்கங்களுக்கு உதவியது" என்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் கணேசலிங்கம் சந்திரலிங்கம்.

ஆனால், திரைப்படத்திற்காக உருவா க்கப்பட்ட இந்தப் பாடலை ஈழத் தமிழர் களும், ஈழப் போராட்ட இயக்கங்களும் ஏற்றுக்கொண்டது தற்செயலான ஒன்று அல்ல, காரணம் இந்தப் பாடல் "தினமுரசு" என்ற கற்பனை பத்திரிக்கை யின் போராட்டத்தை மையமாக வைத்து எழுதப்பட்டது அல்ல.

"ஊமை விழிகள்" திரைப்படத்தின் படப்பிடிப்பு நடந்த சமயத்தில், ஈழத்த மிழர் விடுதலை பிரச்னை அதிகமாக பேசப்பட்டது. இலங்கைத் தமிழர்க ளுக்காக ஒரு பாடலை உருவாக்க திட்டமிட்டோம் அதுதான் "தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா பாடல்" என ஒரு நேர்காணலில் கூறியிருப்பார் "ஊமை விழிகள்" திரைப்படத்தின் இயக்குநர் அரவிந்தராஜ்.

"பாடலின் சரணத்தில் "யுத்தங்கள் தோன்றட்டும், ரத்தங்கள் சிந்தட்டும்...பாதை மாறலாமா? ரத்தத்தின் வெப்பத்தில் அச்சங்கள் வேகட்டும் கொள்கை சாகலாமா" என்ற வரிகள் ஈழத்தமிழர்கள் மீது கொண்ட ஈடுபாட் டில் எழுதப்பட்டது" என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

திரைப்படக்குழு நினைத்தது போலவே "ஊமை விழிகள்" திரைப் படம் வெளியாகி ஏறத்தாழ 40 ஆண்டுகள் கடந்தும் இந்தப் பாடல் இலங்கை தமிழர்களிடையே பிரபலமாக உள்ளது.

"ஈழம் எங்கும் கேட்கப்பட்ட பாடலாக "தோல்வி நிலையென நினைத்தால்" இருந்தது. குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களால் விரும்பி கேட்கப்பட்டது. அவர்களில் பலரும் அந்த பாடல், பாடல் வரிகள், பாடல் காட்சிகள் எல்லாமே தங்களுக்காக எழுதப்பட்ட ஒரு பாடல் என்ற விதத்தில் தான் கருதினார்கள்" என்கிறார் ஈழ எழுத்தாளர் தீபச் செல்வன்.

இந்த பாடலை 90களில் இறுதிப் பகுதியில் தான் கேட்டதாகவும், முதலில் இது ஒரு இயக்கத்தின் அதிகாரபூர்வ பாடல் என்று நினைத்ததாகவும் கூறுகிறார் தீபச் செல்வன்.

"இலங்கையிலுள்ள தனியார் வானொலிகளின் வாயிலாக தான் கேட் டேன். அப்போது நாங்கள் கிளிநொச்சி யிலிருந்து இடம்பெயர்ந்து அக்கராயன் பகுதியில் வசித்த காலக் கட்டம். அந்த பாடலைப் பற்றி தேடும் போது தான், அதுவொரு திரைப்படத்தில் இடம் பெற்ற ஒரு பாடல் என்று தெரியவந்தது. 2009 காலகட்டத்திலும் இந்தப் பாடல் மீண்டும் பிரபலமானது" என்கிறார் அவர்.

"தோல்வி நிலையென நினைத்தால்" பாடலை இலங்கை அரசு வானொலிக ளில் ஒளிபரப்ப "அதிகாரபூர்வமற்ற ஒரு தடை" நிலவியது" என்கிறார் இலங்கை வானொலித் துறையில் பணியாற்றிய முன்னாள் அதிகாரி ஒருவர்.

"இருப்பினும், விடுதலை புலிகள் இயக்கத்தின் வானொலி உள்பட சில தனியார் வானொலிகளில் அந்தப் பாடல் தொடர்ந்து ஒலிப்பரப்பட்டது" என்கிறார் அவர்.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ட்ரம்பின் சீன விஜயம்: பொருளாதாரப் போரின் ஆதிக்கப் போட்டி சீராகுமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

சீனாவை நோக்கிய ட்ரம்பின் அணுகுமுறையானது உலக பொருளாதாரப் போர், பிராந்திய ஆதிக்கப் போட்டி என்ற இரு கோணங்களிலும் உலக கவனத்தை ஈர்த்து வருகிறது. இந்நிலையில் ட்ரம்பின் சீன விஜயம் என்பது ஒரு சாதாரண அரசியல் பயணம் அல்ல. அது உலக அரசியல் மற்றும் பொருளாதாரத்தின் மையத்தில் நடந்த அதிகாரப் போட்டியின் வெளிப்பாடாக தான் கருதப்பட வேண்டியுள்ளது.

ட்ரம்பின் தற்போதைய சீன விஜயம், ஈரான் மீதான போர் நிறுத்தம் இழுபறியாகியுள்ள சூழலில் நடைபெறுகிறது. சர்வதேச வர்த்தக போட்டியிலும், பேச்சுவார்த்தையிலும் உலக அரசியல் இழுபறியாகியுள்ள நிலையில் ட்ரம்ப் பெய்ஜிங் விஜயம் பல விடயங்களை கேள்விக்குறிக்கு உட்படுத்தி உள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் 2026 மே மாதம் சீனாவுக்கு மேற்கொண்ட மூன்று நாள் அரசுமுறைப் பயணம், உலக பொருளாதார மற்றும் அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கும் இந்த உயர்மட்டச் சந்திப்பு, இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான வர்த்தகப் போர் மற்றும் ஆதிக்கப் போட்டியைச் சீராக்குமா என்பது குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

இந்தச் சந்திப்பில் இரு நாட்டு தலைவர்களும் வர்த்தகப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்க - சீன வர்த்தக வாரியத்தை உருவாக்குவது குறித்து ஆலோசனை நடத்தப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மாறிவரும் உலக சூழலில் ட்ரம்பின் முந்தைய ஆட்சிக் காலத்தைப் போலல்லாமல், தற்போதைய சீனப் பயணம் முற்றிலும் மாறுபட்ட சூழலில் நடக்கிறது. சீனா, அமெரிக்காவுடனான வர்த்தகச் சார்பைக் குறைத்து, வியட்நாம், இந்தோனேசியா போன்ற நாடுகளுடன் வர்த்தக உறவை வலுப்படுத்தியுள்ளது.

சீனா மீது நூறுவீத வரி மற்றும் வர்த்தக தண்டனைகளை அறிவித்த பிறகே ட்ரம்ப் இந்தச் சந்திப்புக்கு வந்துள்ளார். இது பேச்சுவார்த்தையில் அழுத்தம் கொடுக்கும் உத்தியாகப் பார்க்கப்படுகிறது. வர்த்தகப் போர் மட்டுமின்றி, தொழில்நுட்ப ஆதிக்கம் மற்றும் தாய்வான் போன்ற மூலோபாய விவகாரங்களும் இந்தச் சந்திப்பில் முக்கிய விடயமாக இடம்பெற்றுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையே ஆழமான நம்பிக்கையின்மை உள்ளதால், இந்தச் சந்திப்பு ஒரு உண்மையான மறுசீரமைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு என நிபுணர்கள் கருதுகின்றனர். சீனா, அமெரிக்க சந்தையைச் சார்ந்து இருக்கும் தன்மையைக் குறைத்து, புதிய தொழிற்சாலை தளங்களை உருவாக்கி, பொருளாதாரப் போரை எதிர்கொள்ள அதிக தயார்நிலையுடன் உள்ளது.



ட்ரம்பின் சீன விஜயம் உலக அரசியலில் ஒரு முக்கிய திருப்பமாக அமைந்துள்ளது. இது சாதாரண நட்பு விஜயம் அல்ல, உலக ஆதிக்கத்திற்கான போட்டியின் அரசியல் மேடை. இந்த விஜயம் அமெரிக்கா - சீனா உறவுகளில் ஒத்துழைப்பும் மோதலும் ஒன்றாக இணைந்திருப்பதை வெளிப்படுத்தி இருக்கிறது.

அமெரிக்க அரசியலில் சர்ச்சைக்கும் அதிரடிக்கும் பெயர்பெற்ற அதிபர் ட்ரம்ப், அவரது வெளிநாட்டு கொள்கைகள் பல நேரங்களில் உலக நாடுகளை அதிர்ச்சியடையச் செய்தன. குறிப்பாக தற்போதைய சீன விஜயம் பல்வேறு முரண்பாடுகள் முற்றிப்போயுள்ள நிலையில், அமெரிக்க அதிபர் சீனாவுடன் எத்தகைய சமரசத்தை மேற்கொள்ள முடியும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

### சீனா - அமெரிக்க உறவின் பின்னணி

உலக அரசியலின் மையப் போட்டிகளில் மிகவும் முக்கியமான ஒன்றாக இன்று சீனா -அமெரிக்க உறவு மாறியுள்ளது. ஒருபுறம் உலகின் மிகப்பெரிய பொருளாதார, ராணுவ மற்றும் தொழில்நுட்ப வல்லரசாக அமெரிக்கா திகழ்கின்றது. மறுபுறம் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார சக்தியாக சீனா உருவெடுத்துள்ளது. இந்த



இரண்டு நாடுகளின் உறவு ஒத்துழைப்பும் போட்டியும் கலந்த சிக்கலான ஒன்றாகவே கடந்த நூற்றாண்டு முழுவதும் வளர்ந்து வந்துள்ளது.


தற்போது அமெரிக்கா, சீனா உலகின் மிகப்பெரிய பொருளாதார வல்லரசுகளாக விளங்குகின்றன. ஆனால் இரு நாடுகளும் வர்த்தக ரீதியாக கூட்டாளிகளாக இருப்பதற்கும் மேலாக போட்டியாளர்களாகவே பார்க்கப்படுகின்றன. தொழில்நுட்பம், வர்த்தகம், இராணுவம், செயற்கை நுண்ணறிவு, தென் சீனக் கடல், தாய்வான் போன்ற பல்வேறு பிரச்சினைகள் இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு மோதலை உருவாக்கி வருகின்றன.

ட்ரம்ப் ஆட்சிக்கு வந்தபோது "அமெரிக்காவே முதல்" என்ற கொள்கையை முன்னிறுத்தினார். இதன் அடிப்படை நோக்கம் அமெரிக்காவின் பொருளாதார ஆதிக்கத்தை மீண்டும் நிலை நிறுத்துவதாகும். அதற்காக சீனாவின் வர்த்தக நடைமுறைகளை அவர் கடுமையாக விமர்சித்தார். சீன பொருட்களுக்கு அதிக வரி விதித்ததும், தொழில்நுட்பத் தடைகளை ஏற்படுத்தியதும் உலக பொருளாதாரத்தில் பெரிய அதிர்வுகளை ஏற்படுத்தின. இதற்குப் பதிலாக சீனாவும் அமெரிக்கப் பொருட்களுக்கு பதிலடி வரிகளை விதித்தது. இதனால் உலக சந்தைகள் பதற்றமடைந்தன. பங்குச் சந்தைகள் வீழ்ச்சி கண்டன. பல நாடுகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பாதிக்கப்பட்டது. உலக பொருளாதார வளர்ச்சியிலும் மந்தநிலை உருவானது.

### வர்த்தகப் போரின் தொடக்கம்

ட்ரம்பின் இந்த விஜயத்தின் பின்னர் கூட அமெரிக்கா - சீனா உறவுகள் சீராகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மாறாக இன்னும் வர்த்தகப் போர் தீவிரமடையவே சாத்தியங்கள் உள்ளன. ட்ரம்ப் சீனாவை நியாயமற்ற வர்த்தக நாடு என்று குற்றம் சாட்டி வருகிறார். சீன நிறுவனங்கள் அமெரிக்க தொழில்நுட்பத்தை களவாடுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

உலக அரசியலில் தாக்கம் விளைவிக்கும் வண்ணம், ட்ரம்பின் சீன அணுகுமுறை உலக நாடுகளையும் புதிய முடிவுகளுக்கு தள்ளியது. பல நாடுகள் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் சமநிலையை பேண முயன்றன. குறிப்பாக ஆசிய நாடுகள் பாதுகாப்பில் அமெரிக்காவை நம்பியபோதும், பொருளாதாரத்தில் சீனாவை நம்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்தப் போட்டி "புதிய பனிப்போர்" எனப் பல அரசியல் விமர்சகர்களால் விவரிக்கப்பட்டது. ஒரு பக்கம் அமெரிக்கா தனது உலக ஆதிக்கத்தை காக்க முயன்றது. மறுபக்கம் சீனா தனது



பொருளாதார மற்றும் இராணுவ வளர்ச்சியின் மூலம் புதிய உலக மையமாக மாற முயன்றுள்ளது.

### ஆரம்பகால உறவும் பனிப் போர் பகைமையும்:

19ஆம் நூற்றாண்டில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கிடையிலான தொடர்புகள் வர்த்தகத்தை மையமாகக் கொண்டிருந்தன. சீனாவின் தேநீர், பட்டுப் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் அமெரிக்க சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றன. அதேவேளை மேற்கத்திய சக்திகள் சீனாவின் உள்நாட்டுச் சூழ்நிலைகளில் தலையீடு செய்த காலமாகவும் அது இருந்தது.

1949ஆம் ஆண்டு சீனாவில் கம்யூனிஸ்ட் புரட்சி வெற்றி பெற்றபின், மாவோ சேதுங் தலைமையில் மக்கள் சீனக் குடியரசு உருவானது. இதனால் அமெரிக்கா - சீனா உறவு கடுமையாகப் பாதிக்கப்பட்டது. பனிப்போர் சூழலில் அமெரிக்கா, சீனாவை சோவியத் அணியின் கூட்டாளியாகக் கருதியது.

1950களில் நடைபெற்ற கொரிய போர் சீனா - அமெரிக்க உறவை மேலும் மோசமாக்கியது. வட கொரியாவுக்கு ஆதரவாக சீனா போரில் ஈடுபட்டபோது, அமெரிக்கா தென் கொரியாவுக்கு ஆதரவாக இருந்தது. இதன் பின்னர் இரு நாடுகளும் நேரடி எதிரிகளாகக் கருதப்பட்டன.



இதனுடன் தாய்வான் பிரச்சினையும் முக்கிய முரண்பாடாக மாறியது. கம்யூனிஸ்ட் ஆட்சியிலிருந்து தப்பிய தேசியவாத அரசு தாய்வானில் தஞ்சமடைந்தபோது, அமெரிக்கா தாய்வானுக்கு ஆதரவு வழங்கியது. இன்று வரை இந்த பிரச்சினை சீனா - அமெரிக்க உறவில் முக்கிய பதற்றக் காரணமாக உள்ளது.

1970களில் உலக அரசியலில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. சோவியத் ஒன்றியத்தின் வளர்ந்த செல்வாக்கை எதிர்கொள்ள அமெரிக்கா சீனாவுடன் உறவை மேம்படுத்த முயன்றது. 1972ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் றிச்சர்ட் நிக்சன் சீனாவுக்கு மேற்கொண்ட வரலாற்றுப் பயணம் உலக அரசியலில் திருப்புமுனையாக அமைந்தது.

அதன் பின்னர் இரு நாடுகளும் தூதரக உறவுகளை நிறுவின. சீனா உலக பொருளாதார அமைப்பில் படிப்படியாக இணைந்தது. அமெரிக்க முதலீடுகள் சீனாவுக்குள் பெருமளவில் நுழைந்தன.

### ட்ரம்பின் அரசியல் பாணி

ட்ரம்பின் சீன விஜயத்தில் மிகவும் கவனிக்கப்பட்ட அம்சம் அவரது அரசியல் பாணி. ஒரு தருணத்தில் சீனாவை கடுமையாக விமர்சித்த அவர், மற்றொரு தருணத்தில் சீன அதிபருடன் நெருக்கமான உறவை வெளிப்படுத்தினார். இது ட்ரம்பின் அழுத்தம் கொடுத்து பேச்சுவார்த்தை நடத்தும் அரசியல் முறையின் ஒரு எடுத்துக்காட்டாக பார்க்கப்பட்டது.

அவரது அணுகுமுறை சில அமெரிக்கர்களால் பாராட்டப்பட்டது. சீனாவின் பொருளாதார ஆதிக்கத்தை எதிர்கொள்ளத் துணிந்த தலைவர் என அவரை ஆதரவாளர்கள் புகழ்ந்தனர். ஆனால் விமர்சகர்கள், அவரது கொள்கைகள் உலக பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்ததாகவும் கூறியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு சுமூகமாக நடந்து, ட்ரம்ப் மரியாதை குறைவாக நடத்தப்படவில்லை என உணர்ந்தால், தற்போதைய பதற்றமான அமைதி நிலை தொடரும். ஆனால், இந்தச் சந்திப்பு உலகப் பொருளாதாரப் போரை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவருமா என்பது சந்தேகமே, ஏனெனில் இது ஒரு நீண்டகால ஆதிக்கப் போட்டியாகும். ட்ரம்பின் இந்த பயணம், சீனா மீதான அழுத்தத்தை அதிகரிப்பதா அல்லது வர்த்தக உறவை சீரமைப்பதா என்பதைப் பொறுத்தே அதன் வெற்றி அமையும்.

இன்றும் உலக அரசியல் அமைப்பில் அமெரிக்கா மற்றும் சீனா இடையிலான போட்டி கடுமையாக தொடர்கிறது. அந்தப் போட்டியின் முக்கிய அத்தியாயங்களில் ஒன்றாக ட்ரம்பின் சீன விஜயம் வரலாற்றில் நினைவுகூரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சிறீலங்கன் எயார்லைன்ஸ் தவறால் 8 கோடி ரூபாய் அபுதாபிக்கு மாற்றம்

### தயாசிறி ஜயசேகர எம். பி. தகவல்

கொழும்பு, மே 17

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் சென்னை கிளையினால் மேற்கொள்ளப்பட்ட நிதிப் பரிமாற்றத்தின்போது, 8 கோடி ரூபாய்க்கும் அதிகளவிலான பணம் தவறான வங்கிக் கணக்கொன்றில் வைப்பு செய்யப்பட்டுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

டுபாயில் உள்ள முகவர் நிறுவனம் ஒன்றுக்கு செலுத்தவேண்டிய மாதாந்த கொடுப்பனவே இவ்வாறு தவறுதலாக வேறொரு வங்கிக்கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

செலுத்தப்படவேண்டிய வங்கி: எமிரேட்ஸ் என்.பி.டி வங்கிக் கணக்கு. தவறுதலாக செலுத்தப்பட்ட வங்கி: அபுதாபி இஸ்லாமிய வங்கிக் கணக்கு.

இவ்வாறு தவறான கணக்குக்கு அனுப்பப்பட்டுள்ள தொகை இலங்கை நாணய மதிப்பில் 8 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையாகும். வேறொரு வங்கிக் கணக்குக்குச் சென்ற இந்தப் பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாமல் போயுள்ளதன் காரணமாக, தற்போது பெரியதொரு நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

எனவே, அரசாங்கம் இதில் உடனடியாக தலையிட்டு இந்தத் தகவல்களின் உண்மைத்தன்மையை கண்டறியவேண்டும்- என்றார். (எ)

## ஆசிரியர் சேவை அதிக வருமானம் பெறும் முதல் 10 தொழில்களுக்குள் ஒன்றாக மாறும்!

### அமைச்சர் சந்தன அபேரத்ன கூறுகிறார்

கொழும்பு, மே. 17

ஆசிரியர் சேவையை இந்த நாட்டின் அதிக வருமானம் பெறும் முதல் 10 தொழில்களுக்குள் உள்வாங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்று பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய, ஆசிரியர் சேவையில் உள்ள வேதனப் பிரச்னைகளைத் தீர்க்க படிப்படியாக சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

மேலும், 2021ஆம் ஆண்டு முதல் தாமதமடைந்திருந்த ஆசிரியர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கான போட்டிப் பரீட்சைகள் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கல்வி முறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த



அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் தரம் 9 இல் தேசிய மட்டத்திலான பரீட்சையொன்றை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (அ)

## "நினைவாயுதம்-தமிழின வலிகளின் ஏடு" கண்காட்சி யாழ். பல்கலைக்கழகத்தில்!

யாழ்ப்பாணம், மே. 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒழுங்கமைப்பில் "நினைவாயுதம் - தமிழின வலிகளின் ஏடு" எனும் கண்காட்சி நேற்று காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியக் கட்டடத் தொகுதியில் ஆரம்பமானது.

தமிழ் இன அழிப்பின் வரலாற்றுப் பதிவுகளையும், தமிழர்கள் எதிர்கொண்ட வலிகளையும் வளரிளம் தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சி நேற்று காலை 9.00 மணியளவில் பொதுமக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது.

கண்காட்சியில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் சாட்சிகள், அரிய புகைப்படங்கள், நினைவுப் பொருள்கள், ஆவணங்கள் மற்றும் முள்ளிவாய்க்கால் இறுதிக் கட்டப் போரின் பதிவுகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு கண்காட்சியை பார்வையிட்டு வருகின்றனர்.

நேற்று ஆரம்பமாகிய இக் கண்காட்சி நாளை வரை தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பொதுமக்களுக்காக திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கணேமுல்ல சஞ்சீவ கொலைக்கு துப்பாக்கி வழங்கியவர் ஒஸ்மனே!

### 90 நாட்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்க அனுமதி

கொழும்பு, மே 17

பாதாள உலகக்குழு தலைவன் என அறியப்படும் சமரத்ன சஞ்சீவ என்னும் கணேமுல்ல சஞ்சீவவை கொலை செய்யப்பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி "கம்பஹா ஒஸ்மன்" என்பவரால் வழங்கப்பட்டது என்று கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் அறிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் அஸங்க எஸ். போதரகம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது விடயங்களை முன்வைத்த கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர், கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கின் 44 ஆவது சந்தேக நபராக "கம்பஹா ஒஸ்மன்" என்பவரை பெயரிடுவதாக நீதிமன்றுக்கு தெரிவித்தனர்.

இதேவேளை சந்தேகநபரான கம்பஹா ஒஸ்மன் ஏற்கனவே கைது செய்யப்பட்டு 72 மணித்தியால தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். அந்த காலப்பகுதி நிறைவடைந்த நிலையில், அவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக மேலும் 90 நாட்களுக்குத் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி பெற்றதாக அதிகாரிகள் இதன்போது குறிப்பிட்டனர்.

மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளின்படி, இந்தக் கொலைச் சம்பவத்தின் முதலாவது சந்தேகநபரான துப்பாக்கிதாரிக்கு, கொலையை செய்வதற்குத் தேவையான துப்பாக்கியை கம்பஹா ஒஸ்மன் வேறொரு இடத்திற்குச் சென்று கையளித்தமை கண்டறியப்பட்டுள்ளது என்று கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் மன்றுக்கு தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## இலங்கை நீதிமன்ற...

நாடளாவிய ரீதியிலுள்ள 293 நீதிமன்றங்களில் மொத்தம் 1,134,474 வழக்குகள் நிலுவையில் உள்ளமை தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீதவான் நீதிமன்றங்கள் 818,869 வழக்குகள், மாவட்ட நீதிமன்றங்கள் 260,007 வழக்குகள், உயர் நீதிமன்றம் - குற்றவியல் 27,376 வழக்குகள், மாகாண சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்றங்கள் 6,591 வழக்குகள், வணிக உயர் நீதிமன்றம் 6,330 வழக்குகள்,

உயர் நீதிமன்றம் 5,396 வழக்குகள், மேன்முறையீட்டு நீதிமன்றம் 5,216 வழக்குகள், தொழில் தீர்ப்பாயங்கள் 3,131 வழக்குகள்,

சிறுவர் நீதவான் நீதிமன்றங்கள் 1,556 வழக்குகள், நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் 65 வழக்குகள் ஆகும்.

நீதிமன்றக் கட்டமைப்பில் நிலவும் இந்த வழக்குத் தேக்கம், நீதியை நிலைநாட்டுவதில் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## மீனவர்களுக்கு...

அறிக்கையின் ஊடாகவே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டிற்கு வடகிழக்கு திசையில் வங்காள விரிகுடாவின் தென்மேற்கு பகுதியில் நிலைகொண்டுள்ள குறைந்த அழுத்தப் பிரதேசம் தொடர்ந்து அதே இடத்தில் நீடிக்கிறது.

இதன் காரணமாக, நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் தற்போது நிலவி வரும் மழையுடனான காலநிலையும், பலத்த காற்றுடனான சூழ்நிலையும் மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டைச் சூழவுள்ள ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளிலும், வங்காள விரிகுடாவின் ஆழம் கூடிய பரப்புகளிலும் மிக பலத்த காற்று வீசக்கூடும்.

இதன் காரணமாக இக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 168 மணித்தியாலங்களுக்குள் (7 நாள்களுக்குள்) இந்த குறைந்த அழுத்தப் பிரதேசம் சூறாவளியாக மாறுவதற்கான சாத்தியக்கூறுகள் 'இல்லை' என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

"கடல்சார் ஊழியர்கள், கடற்றொழில் சமூகம் மற்றும் பொதுமக்கள் இக்காலநிலை மாற்றம் குறித்து மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அத்துடன், வளிமண்டலவியல் திணைக்களத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் எதிர்கால முன்னறிவிப்புகள் மற்றும் உத்தியோகபூர்வ அறிக்கைகளைத் தொடர்ந்து அவதானிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (அ)

## மின்சார சபை...

சஞ்சீவ தம்மிக்க, இந்த மறுசீரமைப்பு நடவடிக்கை நிறுவனத்தின் பெயரையும் கட்டமைப்பையும் மாத்திரமே மாற்றியுள்ளதாகத் தெரிவித்தார்.

மின்சார சபையின் பெயர் மாறியுள்ளதே தவிர, வினைத்திறன் சிறிதளவும் மேம்படவில்லை. உண்மையாகவே வினைத்திறன் அதிகரித்திருந்தால், மின்சாரக் கட்டணங்கள் தொடர்ந்து உயர்ந்து கொண்டிருக்காது என அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் நாள்களில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவித்துள்ள அவர், அது மின்சாரக் கட்டணங்கள் மீது மேலும் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் என எச்சரித்தார்.

எரிபொருள் விலை மீண்டும் உயர்ந்தால் அதற்கான தீர்வு என்ன? இப்போதும் அவ்வப்போது மின்கட்டணங்கள் உயர்த்தப்படுகின்றன. முன்னரும் இதுவே நடந்தது. அப்படியென்றால் தற்போதைய மாற்றத்தில் என்ன வித்தியாசம் இருக்கிறது? மக்கள் மத்தியில் எவ்வித மாற்றத்தையும் நாம் காணவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## வாகன இறக்குமதி...

ஓட்டோக்கள் மற்றும் வாழ்வாதாரத் தொழில் வாகனங்களுக்கு இந்த வரி அதிகரிப்பு எவ்வகையிலும் பொருந்தாது என்று தொழில் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

சமூக ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் வதந்திகளால் டொலரின் பெறுமதிக்கு ஏற்படும் கூடுதல் அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்குத் தேவையான டொலர் இருப்புகளைப் பாதுகாப்பதற்காகவுமே தனிப்பட்ட பயன்பாட்டுக்கான வாகன இறக்குமதிக்கான தீர்வைக் கட்டணம் தற்காலிகமாக மூன்று மாத காலத்துக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 1980களின் பிற்பகுதியில்...

1990 மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதியில், இந்திய அமைதிகாக்கும் படையினர் மற்றும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களே இவ்வாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலான வர்கள் தமிழ் ஆண்கள் என்பதுடன், இது வெறும் எண்ணிக்கை அல்ல் திட்டமிட்டு வரலாற்றிலிருந்து மறைக்கப்பட்ட மனித உயிர்களின் பதிவாகும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வன்முறைகள் டிஜிற்றல் காலத்திற்கு முன்பு இடம்பெற்றதால் பாதிக்கப்பட்டவர்களின் முழுமையான விபரங்கள் ஒருபோதும் அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிவித்துள்ள சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யாஸ்மின் சூக்கா, "திட்டமிட்டு அழிக்கப்பட்ட அடையாளங்களை மனித கண்ணியத்துடன் மீட்டெடுப்பதே தமது அமைப்பின் தற்போதைய பணி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "30 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், நடந்த கொடூரங்களுக்கு இதுவரை யாரும் பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்படவில்லை தண்டனையின்றி தப்பிக்கும் இந்த நிலை இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கப் போகிறது?" என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மனித உரிமைகள் தரவு ஆய்வுக்குழுவைச் சேர்ந்த மிசேல் டுசிச் என்பவரின் ஆலோசனையின் கீழ், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள், சத்தியப்பிரமாணங்கள் மற்றும் சரிபார்க்கப்பட்ட ஊடக அறிக்கைகளின் அடிப்படையில் சர்வதேச தரத்திற்கு அமைய இந்தத் தரவுத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான விபரங்களை பிரதேசம், பாலினம், காலகட்டம் மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் மிக இலகுவாகத் தேடிப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையிலிருந்து...

பெற்றுள்ளது. ஆனால், இந்த கணக்கு உண்மையில் இலங்கையிலிருந்து ஒருவரால் இயக்கப்படுகிறது.

குடியேற்றவாசிகளுக்கு எதிரான போலி காணொளிகளைப் பகிரும் இந்தப் பக்கமும் இலங்கையிலிருந்தே இயக்கப்படுவதாக மெட்டா நிறுவனத்தின் வெளிப்படைத்தன்மைக் கருவிகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இலங்கைக்கு மேலதிகமாக மாலைதீவு, ஐக்கிய அரபு அமீரகம், ஈரான், வியட்நாம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் இவ்வாறான கணக்குகள் இயக்கப்படுகின்றன. பிரித்தானியாவில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட கணக்குகளைக் குறைந்த விலைக்கு விலைக்கு வாங்கி, வெளிநாட்டவர்கள் தங்களைப் பிரித்தானிய குடிமக்கள் போலக் காட்டிக்கொள்வது இதன் மூலம் எளிதாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்குகள் மூலம் மில்லியன் கணக்கான பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் அதிதீவிரம் வாய்ந்த போலி ஏ.ஐ. காணொளிகள் உருவாக்கப்படுகின்றன.

பிரித்தானிய பாராளுமன்றத்தில் அரபு ஆடைகளை அணிந்த ஆண்கள் ஷரியா சட்டத்தை அமுல்படுத்துவது போன்ற காட்சிகள்.

லண்டன், லிவர்பூல், பேர்மிங்ஹாம் ஆகிய நகரங்கள் 2050 ஆம் ஆண்டில் குப்பை மேடுகளாகவும், இஸ்லாமிய மயமாக்கப்பட்டும், வன்முறைகள் நிறைந்த இடங்களாகவும் மாறுவது போன்ற கற்பனை காணொளிகள். (இந்த வீடியோக்கள் 20 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களைப் பெற்றுள்ளன).

லண்டன் முதல்வர் சர் சாதிக் கான் இது குறித்துக் கருத்து வெளியிடுகையில், இந்த வலைப்பின்னலுக்குப் பின்னால் இரண்டு பிரதான காரணங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்:

ரஷ்யா, சீனா மற்றும் ஈரான் போன்ற பிரித்தானியாவுக்கு எதிரான நாடுகள் மற்றும் அமெரிக்காவின் தீவிர வலதுசாரி அமைப்புகள் பிரித்தானியாவின் ஸ்திரத்தன்மையைக் குலைக்க இவற்றை ஆதரிக்கின்றன.

சமூக ஊடகங்களில் அதிகப் பார்வையாளர்களைப் பெறுவதன் மூலம் விளம்பர வருமானம் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டு தனிநபர்களும் நிறுவனங்களும் இதனைச் செய்கின்றன.

இவ்வாறான போலி ஏ.ஐ. காணொளிகள் லண்டன் மற்றும் பிரித்தானியாவின் நற்பெயரை சர்வதேச ரீதியில் பாதிப்பதுடன், வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலாத்துறையையும் பாதிப்பதாக முதல்வர் கவலை வெளியிட்டுள்ளார். (அ)

## தமிழர் அபிலாஷை...

இந்த "தமிழ் அரசியல் கட்டமைப்பு முன்முயற்சி" லண்டனில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முன்முயற்சியானது, தமிழர்கள் தனித்துவமானதொரு தேசிய கட்டமைப்பைக் கொண்ட ஒரு சமூகம் என்ற அடிப்படையிலும், இலங்கைத் தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான பூர்வீக வாழ்விடங்கள் என்ற கோட்பாட்டின் படியும் முன்னெடுக்கப்படுகிறது.

அத்துடன், சர்வதேச சட்டக் கோட்பாடுகளுக்கு இணங்க தமிழ் மக்கள் தங்களின் சொந்த அரசியல் எதிர்காலத்தை ஜனநாயக ரீதியில் தீர்மானிப்பதற்கான சுயநிர்ணய உரிமையைக் கொண்டுள்ளனர் என்ற மூன்று பிரதான ஜனநாயகக் கொள்கைகளை இந்தச் செயல்முறை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

கடந்தகாலப் போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த பொதுமக்களுக்கான ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் இந்த பாராளுமன்ற மாநாடு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய மிச்சம் மற்றும் மோர்டன் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்றக் குழுவின் தலைவருமான சியோபான் மெக்டொனாக், ஒரு தலைமுறையில் முதல்முறையாக உண்மையான அரசியலமைப்பு மாற்றத்திற்கான சர்வதேசச் சூழல் தற்போது கனிந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும், அந்த மாற்றங்களை வடிவமைக்கும் செயல்முறைகளில் தமிழ் மக்களுக்கும் உரியதொரு பிரதிநிதித்துவமும் ஆசனமும் கிடைப்பதை உறுதி செய்வதே தற்போதைய முக்கிய தேவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த புதிய முன்முயற்சியானது இலங்கையின் வடக்கு - கிழக்குத் தாயகத்தின் மக்கள் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் உலகெங்கிலும் பரந்து வாழும் புலம்பெயர் தமிழ் சமூகங்களை ஒரே ஜனநாயகக் கட்டமைப்பு, ஒரே ஆணை மற்றும் ஒரே குரலின் கீழ் ஒன்றிணைப்பதாக மெக்டொனாக் தெரிவித்தார்.

அத்துடன், பிரித்தானியாவின் வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பை வழங்கி வரும் தமிழ் சமூகத்தின் இந்த அமைதி வழி அரசியல் முயற்சிக்கு பிரித்தானிய பாராளுமன்றம் தனது ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## தமிழ்க் கட்சிகள்...

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வளைகுடா போர் நிறுத்தப்பட்டு சுமூகமான சூழல் ஏற்பட்டால், அரசாங்கம் நிச்சயமாக மாகாண சபைத் தேர்தலை நடத்தத் பார்க்கும் என்பதை நான் உறுதியாகச் சொல்ல முடியும்.

அந்தவகையிலே, இன்று பிரஜாசக்தி மூலமாக, கிராம ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும், மற்றவர்களை அரவணைத்துச் செல்லாமல் தனித்து செயற்படுகின்றனர்.

அடுத்த வருடங்களில், ஜனாதிபதிக்கும் இந்த அரசாங்கத்துக்கும் மக்களின் ஆதரவு எந்தளவுக்கு இருக்கும் என்ற சந்தேகம் இருக்கிறது.

ஏனெனில், நிலக்கரி ஊழல் உட்பட பல்வேறு முறைகேடுகளால், அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாத ஒரு சூழல் நிலவுகிறது.

இத்தகைய நிலையில், அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தி, மாகாண சபைகளைத் தன்வசப்படுத்த முயற்சிக்கும்.

மாறாக அடுத்த ஆண்டு தேர்தலை நடத்துவார்களே ஆனால், அவர்கள் நினைப்பது போல் பல மாகாண சபைகளை இழக்க நேரிடும்.

வடக்கு-கிழக்கில், நாங்கள் ஒற்றுமையாக மக்கள் விரும்பும் செயலை மேற்கொள்ளவில்லையாயின், நாம் தேசியம் பேசி எதுவித பயனும் இல்லை. நாம் மக்களைக் காப்பாற்றுகிறோம் என்று, உதட்டோரமே பேசுகின்றோம் என அர்த்தப்படும்.

எங்களுக்குள் ஒற்றுமை இல்லை என்றால், தேசிய மக்கள் சக்தி அரசே, மாகாண சபைகளைக் கைப்பற்றும் சூழல் உருவாகும்.

குறிப்பாக அவர்கள் எப்போதும் ஒற்றுமையாக வரமாட்டார்கள் என்ற விரக்தியின் காரணமாக, மக்கள் அரசுக்கு வாக்களிப்பார்கள்.

இதனால், தேசிய மக்கள் சக்தியானது மாகாண சபைகளை கைப்பற்றுகின்ற அபாய நிலையை ஏற்படும்.

அவ்வாறான நிலை ஏற்படுமாயின், தேசியம் பேசும் அனைத்துக் கட்சிகளும் அருகதையற்றவர்கள் என்ற நிலைக்கும், மக்கள் எங்களை புறக்கணித்துள்ளனர் என்ற நிலைக்கும் உட்படுவோம்.

மக்கள் எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை என்ற அபாய நிலைக்கு, நாம் எப்போதும் செல்லக்கூடாது என்பது எனது கருத்தாகும்.

எனவே, சுயநல செயற்பாடுகளை விட்டுவிட்டு, தேர்தல் ஒற்றுமையாக மட்டும் இல்லாமல், மக்களின் அனைத்து விடயங்களிலும் நாங்கள் ஒரு சக்தியாக மாறவேண்டும்.

இல்லையெனில், தேசியம் பேசும் கட்சிகள் மக்களால் நிராகரிக்கப்படும் என்பதை, ஒரு எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன்-என்றார். (அ)

## வங்கிகள், நிதி...

வாரத்தின் 7 நாள்களும் 24 மணித்தியாலங்களும் செயற்படும் இந்தத் தளத்தின் மூலம், நுகர்வோர் தமக்கு வசதியான நேரத்தில் முறைப்பாடுகளை பதிவு செய்ய முடிவதுடன், தங்களின் முறைப்பாடுகளின் தற்போதைய நிலை மற்றும் அதன் முன்னேற்றங்களையும் இணையவழியிலேயே நேரடியாகக் கண்காணித்துக் கொள்ள முடியும்.

மேலும், காகித ஆவணங்கள் அடிப்படையிலான செயல்முறைகள் குறைக்கப்படுவதால், முறைப்பாடுகளுக்கு தீர்வு காண்பதில் ஏற்படும் காலதாமதங்களும் தவிர்க்கப்படும் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

நுகர்வோர் தங்களின் முறைப்பாடுகளை அல்லது குறைகளை முதற்கட்டமாக சம்பந்தப்பட்ட நிதிச் சேவை வழங்குநரிடமே (வங்கி அல்லது நிதி நிறுவனம்) நேரடியாக சமர்ப்பிக்கவேண்டும்.

அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அந்த நிறுவனங்கள் தீர்வு காணத் தவறினால் அல்லது அவர்களின் பதில்கள் திருப்தியளிக்காத பட்சத்தில் மட்டுமே, இந்த இணையவழி முறைமையின் ஊடாக இலங்கை மத்திய வங்கியிடம் முறையிட முடியும்.

இந்தத் தளத்தைப் பயன்படுத்தும் நுகர்வோர், தாங்கள் சமர்ப்பிக்கும் தகவல்கள் தெளிவானதாகவும், துல்லியமானதாகவும் இருப்பதை உறுதி செய்வதோடு, அது தொடர்பான அனைத்து ஆவணங்களையும் இணைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நிதி நுகர்வோர் இந்த புதிய சேவைக்காக வடிவமைக்கப்பட்டுள்ள rவலின்://reachus.cbsl.lk/ என்ற உத்தியோகபூர்வ இணையத்தள முகவரியின் ஊடாக பிரவேசித்து தங்களின் முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

## மார்ச்சில் தனியார்...

என நம்பப்படுகிறது.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள முக்கிய நிதியியல் விவரங்களில்,

மார்ச் மாதத்தில் மாத்திரம் வணிக வங்கிகள் தனியார் துறைக்கு 258.4 பில்லியன் ரூபாய் கடன்களை வழங்கியுள்ளன. இது பெப்ரவரி மாதத்தில் பதிவான 144.4 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில் இருமடங்கு உயர்வாகும்.

கடந்த ஆண்டு (2025) நவம்பரில் பதிவான 262.6 பில்லியன் ரூபாய் என்ற வரலாற்றின் உச்சக்கட்ட மாதாந்தப் பதிவுக்கு மிக நெருக்கமாக இம்மாதப் பதிவு அமைந்துள்ளது.

இதற்கமைய, இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மாத்திரம் தனியார் துறைக்கான கடன் விரிவாக்கம் 485.4 பில்லியன் ரூபாயாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27.1 வீதம் அதிகரிப்பாகும்.

பெப்ரவரி மாத இறுதியில் வெடித்த ஈரானியப் போர், உலகளாவிய ரீதியில் மசகு எண்ணெய் விலையை உயர்த்தியுள்ளதுடன், இலங்கையின் பொருளாதார மீட்சி மீதும் கடுமையான அழுத்தத்தைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது.

இலங்கையின் பணவீக்கம் எதிர்பாராத வேகத்தில் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. ஏப்ரல் மாதத்தில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 5.4 வீதமாக உயர்ந்துள்ளது (முன்னர் இது 2.2 வீதமாக இருந்தது).

வணிகக் கடன்களுக்கான முக்கிய அளவுகோலாகக் கருதப்படும் "முதன்மை கடன் வழங்கும் சராசரி வட்டி வீதம்" போர் தொடங்கியதிலிருந்து 44 புள்ளிகளால் அதிகரித்து 9.79 வீதமாக உயர்ந்துள்ளது.

வணிக வங்கிகளில் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் விற்பனை விலை 330 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இது இறக்குமதிச் செலவுகளை (குறிப்பாக எரிபொருள்) மேலும் அதிகரிக்கும்.

கடன் தேவை தற்போதைக்கு அதிகமாகக் காணப்பட்ட போதிலும், நாட்டின் வணிக வங்கிகள் வரும் மாதங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படத் தொடங்கியுள்ளன.

நிலவும் பூகோள அரசியல் பதற்றங்கள் மற்றும் பொருளாதாரக் காரணிகளால் வாடிக்கையாளர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் சிக்கல்களைச் சந்திக்கலாம் என்பதால், வங்கிகள் சாத்தியமான கடன் இழப்புகளுக்கு எதிரான ஏற்பாடுகளை அதிகரித்துள்ளன.

கடந்த 2025 ஆம் ஆண்டில் வட்டி விகிதங்கள் குறைவாக இருந்தமையால், வரலாற்றிலேயே அதிகூடிய அளவாக 2 ட்ரில்லியன் ரூபாய்க்கும் அதிகமான கடன்களைத் தனியார் துறை பெற்றிருந்தது.

எனினும், தற்போதைய பணவீக்கம் மற்றும் டொலர் நெருக்கடி காரணமாக, இந்த மாத இறுதியில் மத்திய வங்கி எடுக்கவுள்ள நாணயக் கொள்கை முடிவுகள் வட்டி விகிதங்களை மேலும் உயர்த்துமா என்பதை வர்த்தக உலகம் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# இலங்கையில் ஐந்தில் ஒருவர் தொற்றா நோயினால் பாதிப்பு!

## சுகாதார அமைச்சர் நளிந்த தகவல்



கொழும்பு, மே. 17

இலங்கையின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒருவருக்கு (20 வீதம்) ஏதேனும் ஒரு வகையான தொற்றா நோய் பாதிப்பு காணப்படுவதாக சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையானது நாட்டின் பொதுச் சுகாதாரத்துக்கு விடுக்கப்பட்டுள்ள கடுமையான சவாலாகும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

களுத்துறை ஆயுர்வேத ஆதார மருத்துவமனையில் 250 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட நான்கு மாடி விடுதி வளாகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் 2024ஆம் ஆண்டு அறிக்கையை மேற்கோள் காட்டி உரையாற்றிய அமைச்சர், சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரையிலான அனைத்து வயதினரையும் உள்ளடக்கிய தரவுகளின் அடிப்படையிலேயே இந்த விவரம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுபவர்களில் மற்றும் பதிவாகும் மரணங்களில் சுமார் 80 வீதமானவை தொற்றா நோய்களுடனேயே தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன.

நாட்டின் முதன்மைச் சுகாதார சவாலாக இது உருவெடுத்துள்ளது.

தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு அதிக விலை கொண்ட மருந்துகளையோ அல்லது அதிநவீன மருத்துவ தொழில்நுட்பங்களையோ மட்டும் நம்பியிருக்காமல், கிராமிய மற்றும் சமூக மட்டத்திலான விழிப்புணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்.

இதய நோய்களுக்கான சிகிச்சைக்கான காத்திருப்புப் பட்டியலைக் குறைக்கும் நோக்கில், இந்த ஆண்டில் 3 பில்லியன் ரூபாவுக்கும் அதிக செலவில் நாடு முழுவதுமுள்ள முக்கிய மருத்துவமனைகளில் 16 அதிநவீன கார்டியாக் ஆய்வகங்களை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தொற்றா நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் துறையில் தேசிய மட்டத்திலான தலையீடுகளும், அடிமட்ட அளவிலான விழிப்புணர்வுத் திட்டங்களும் தற்போதைய சூழலில் மிக அவசரமாகத் தேவை - என்றார். (அ)

# முள்ளிவாய்க்கால் நினைவு தூபி சிட்னி நகரத்தில் திறந்து வைப்பு



சிட்னி, மே. 17


இறுதிப்போரின் போது உயிரிழந்த மக்களின் நினைவாகவும், அவர்களின் நினைவு நாட்களில் மலர் தூவி அஞ்சலி செலுத்துவதற்காகவும் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில்அமைக்கப்பட்ட நிரந்தர "தமிழர் இனவழிப்பு நினைவுத் தூபி" (முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சிட்னியிலுள்ள பென்டில் ஹில் சிவிக் பூங்காவில் அமைந்துள்ள பொது இடத்தில், கம்பர்லாந்து நகர சபையின் ஆதரவுடன் இந்த நினைவுத் தூபி நிறுவப்பட்டுள்ளது.

கம்பர்லாந்து நகர சபை முதல்வர் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு நினைவுத் தூபியைத் திறந்து வைத்தார்.

"தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - சிட்னி" அமைப்பின் முன்னெடுப்பில், சிட்னியிலுள்ள அனைத்துத் தமிழ் அமைப்புகளினதும் ஆதரவோடு இந்த நினைவுச் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது. (அ)

# அம்பன் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் கஞ்சி வழங்கலும்!



யாழ்ப்பாணம், மே. 17

வடமராட்சிக் கிழக்கு அம்மன் பகுதியிலும் பிரதேச இளைஞர்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் கஞ்சி வழங்கல் நிகழ்வும் நடத்தப்பட்டுள்ளது.

அம்பன் கொட்டோடை சந்தியில் இடம் பெற்ற நிகழ்வில் முதல் நிகழ்வாக பொது ஈகச் சுடரை குடத்தனை வட்டார பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் அகஸ்ரின் ஏற்றி வைத்தார். தொடர்ந்து ஈகச் சுடர்ளை பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஆனந்தராஜா சுரேஷ்குமார், மாவீரர்களின் உறவுகளான த. இன்பராசா, ம.ஜெயந்திமலர், திரு மயில்வாகனம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அதனை தொடர்ந்து மலர் வணக்கத்தை பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் ஜெயானந்தம் ஜெயகோபி ஆரம்பித்து வைக்க அனைவரும் மலர் அஞ்சலியை செலுத்தியதை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவாக கஞ்சி வழங்கப்பட்டது. (அ)

# அநுராதபுரம் சிறுமிக்கு நீதி கிட்டும் வெளி அழுத்தங்களுக்கு இடமில்லை

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உறுதி

கொழும்பு, மே. 17

அநுராதபுரம் பகுதியில் சிறுமி ஒருவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சட்டம், முறையாக அமுல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சட்டம், முறையாக அமுல்படுத்தப்படுவதை கண்காணித்து வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த சிறுமியின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவருக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்யவும் அதிகார சபை ஆரம்பம் முதலே செயற்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விசாரணை நடவடிக்கைகளில் எவ்வித வெளி அழுத்தங்களும் இல்லை என்பதால், பொதுமக்கள் தேவையற்ற அச்சமோ அல்லது குழப்பமோ அடையத் தேவையில்லை என்றும் அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால், மக்களின் தேவையற்ற கோபம், நீதி வழங்கும் செயன்முறைக்குத் தடையாக அமையலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனிடையே, பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது விசேட பராமரிப்பு மையம் ஒன்றில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பெருந்தோட்ட பகுதிகளில் வன்முறை; அவசர மாநாட்டுக்கு அரசு இணக்கம்

கொழும்பு, மே. 17

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்கள் மீது அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களை எதிர்கொள்வது தொடர்பில், அனைத்துத் தரப்புகளையும் உள்ளடக்கிய அவசர மாநாடொன்றை எதிர்வரும் புதன்கிழமை பாராளுமன்ற வளாகத்தில் கூட்டுவதற்குப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால சம்மதம் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் பாராளுமன்றத்தில் விடுத்த கோரிக்கை, அதனைத் தொடர்ந்து அனுப் பிய கடிதம் மற்றும் நேரடியாக மேற்கொண்ட தொலைபேசி கலந்துரையாடல் ஆகியவற்றை அடுத்தே அமைச்சர் இந்த உறுதியை வழங்கியுள்ளார்.

அண்மைய நாள்களாக இரத்தினபுரி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் பதிவாகியுள்ள வன்முறைச் சம்பவங்கள் தோட்ட சமூகங்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவுக்கு மனோ கணேசன் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் கடந்த வாரம் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருடன் இணைந்து பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டதாக மனோ கணேசன் சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும், கடந்த மே 10ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடலின் போதும் இச்சம்பவங்கள் குறித்து அவருக்குத் தெளிவுபடுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்

இந்த நிலையில், எதிர்வரும் புதன்கிழமை பாராளுமன்ற வளாகத்தில் மாநாடொன்றைக் கூட்டுவதற்குப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால சம்மதம் தெரிவித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மேலும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுடன், ஐந்து சிவில் செயற்பாட்டாளர்களும் கலந்துகொள்வர் எனவும் மனோ கணேசன் மேலும் கூறினார். (அ)

# வெள்ள அபாய எச்சரிக்கை நீடிப்பு

கொழும்பு, மே 17

அத்தனகலு ஓயா வடிநிலப்பகுதியில் விடுக்கப்பட்டிருந்த வெள்ள அபாய எச்சரிக்கை மேலும் 24 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.